Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை - 203

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

C/638



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530



## கள யதார்த்தம் புரியாத அறிக்கை இது; தமிழோசைக்கு அமைச்சர் டக்ளஸ் பேட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தீவைப் பொறுத்த வரையில் இன்று சுமூகமான நிலை திரும்பியிருக்கிறது. நாடு அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்லுகின்ற இந்த நேரத்தில், இவ்வாறான அறிக்கைகள் குழப்பத்தை ஏற்படுத்தலாம் அல்லது சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்ற நோக்கத்தில் அரசு ஐ.நா. சபைக்கு அறிக்கையை வெளியிட வேண்டாமென்று கூறியிருக்கலாம் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால வரலாறுகளை நாங்கள் மீட்டிப் பார்ப்போமேயானால் இரண்டாம் உலகப் போரின்போது தமது அழிவுகளுக்கு தம்மை வழி நடத்திய ஹிட்லரே காரணம் என்பதை ஜேர்மன் மக்கள் உணர்ந்து தமது நாட்டோடு யுத்தம் செய்த அமெரிக்காவுடன் கைகோர்த்து புதிய ஜேர்மனை உருவாக்கியிருந்தனர் என்பது வர லாற்றில் பதிவாகியிருக்கும் நிகழ்வு.


நாங்கள் உண்மையிலேயே என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும் என்று கூறினால் அது பிரச்சினையல்ல. இந்த அறிக்கையின் உள்நோகம் சந்தே கத்துக்கு இடமான முறையில் இருக்கின்ற படியால்தான் நானும் இதை வேறு கோணத்தில் பார்க்கின்றேன்.

கடந்த கால அனுபவங்கள், எனக்குக் கிடைக்கின்ற தகவல்கள் எல்லாம் அங்கு என்ன நடந்தது? அங்கு என்ன நடந்திருக்கும் (11ஆம் பக்கம் பார்க்க)

# ஏற்றுக்கொள்ள முடியாத முன்மொழிவுகள்

# மேற்கத்தைய சிந்தனை கொண்ட அறிக்கை

## ஐ.நா. நிபுணர்குழுவுக்கு ஜி.எல்.பீரிஸ் பதிலடி



(கொழும்பு)

**இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மேற்கத்தைய ஆலோசனைகளுக்கு இணங்கவே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் முன்மொழிவுகளையும், உள்ளடக்கங்களையும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. மொத்தத்தில் இந்த அறிக்கை பிழை என்று கூறியபின் அது தொடர்பில் கருத்து எதனையும் நான் கூற விரும்பவில்லை என்று வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்** **(12ஆம் பக்கம் பார்க்க)**

## அதிகரித்து வரும் வெளிநாட்டு முதலீடு

(கொழும்பு)

நாட்டின் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கையானது, வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆணையாளர் தர்ம தீரவிங்க தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு அமைப்புகள் மீது வரிகள் அனைத்தும் நீக்கம்

### அபிவிருத்திக்கு அரசு புத்தூக்கம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் மீது இதுவரை காலமும் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வகையான வரிகளையும் முற்றாக நீக்கிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஏனைய வர்த்தக மற்றும் கைத்தொழில் நிறுவனங்களைப் போல கூட்டுறவு அமைப்புகளுக்கும் பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டு வந்தன.

தற்போது மேற்படி வரிகள் அனைத்தையும் முற்றாக அகற்றிவிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவையின் இந்த அறிவித்தல் கடந்த ஜனவரி மாதம் முதல் அமுல் செய்யப்படும் வகையில் நடைமுறைக்கு வந்துள்ளது.

1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் வரிச்சலுகையானது கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட இறைவரி பிரதி ஆணையாளர் ஜி. சிவாஜி தெரிவித்தார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், (11ஆம் பக்கம் பார்க்க)



இந்தியாவின் நிதியுதவியுடன் வடக்கு-கிழக்கில் அமைக்கப்படவுள்ள தொழில் பயிற்சி நிலையங்களுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் பட்டபோது...

# வடக்கு-கிழக்கில் தொழில் பயிற்சி மையங்கள் இந்தியாவின் நிதி உதவியுடன் விரைவில் உதயம்

## புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

தொழிற் பயிற்சி நிலையங் களினூடாக இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்தியா உதவும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கம் வழங்கவுள்ள 2,375 மில்லியன் ரூபா நிதியுதவி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகபெரும மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

2,670 மில்லியன் ரூபா தேவையான இத்திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் 2,375 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளமை (11ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே....**

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I,II இற்கான விடைகளும், கற்றல் குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் சாரதி தண்டம் விதித்தது மன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் சாவகச்சேரி மற்றும் வரணிப்பகுதியைச் சேர்ந்த இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்றயதினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா விசாரணையின் பின்னர் குறித்த இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவரும தலா ஐயாயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறும், செலுத்தத் தவறின் 2 மாதகால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் எனக்கூறி தீர்ப்பளித்தார். (11)

# ஆரியகுளம் துரித அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளம் யாழ்.மாநகரசபையினரால் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பழமைவாய்ந்த இந்தக் குளத்தில் சல்பீனியா தாவரம் படர்ந்து அதன் தன்மை பாதிக்கப்பட்டு வருவதனை. அடுத்து அந்தக் குளத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருப்பதன் காரணமாக யாழ்.மாநகர முதல்வரின் பணிப்பின் பேரில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் மாரி காலத்திற்கு முன்னதாக இக்குளத்தைப் புனரமைப்புச் செய்துமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (பா)

# துரித அபிவிருத்தி நோக்கி பொம்மை வெளிப் பிரதேசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொம்மைவெளி பிரதான வீதி மற்றும் ஒன்பது குறுக்கு வீதிகள் யாழ்.மாநகர சயையினரினால் துரிதகதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

என்றிப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படும் இவ்வீதிகளில் தலா 600 அடி நீளம் கொண்ட ஒன்பது குறுக்கு வீதிகளும் 900 அடி நீளம் கொண்ட பொம்மை வெளி பிரதான வீதியும் அடங்குகின்றன.

யுத்த சூழ்நிலை காரணமாக நீண்ட காலம் திருத்தப்படாமல் இருந்த இப்பகுதி வீதிகள் அங்கு மீள் குடியேறியுள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் முகமாக யாழ்.மாநகர சபையினரால் புனரமைக்கப்படுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன்.

மேலும் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் இவ்வீதிகள் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# பனம் சாராயத்துக்கான கலால் வரிக்குறைப்பு அமைச்சரவை அனுமதியைப் பெற முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு



வட மாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பனம் சாராயத்துக்கான கலால் வரியினைக் குறைப்பதற்கான விசேட அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி அமைச்சரவைப் பத்திரம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேற்படி அமைச்சரவைப் பத்திரம் வட மாகாணத்தில் சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பேணி வரும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் மேலதிகமாக உள்ளது. மற்றும் விரயமாகும் கள்ளில் பனம்சாராயம் உற்பத்திக்கான திக்கம், வலிகாமம், வறணி ஆகிய இடங்களில் பனம் சாராயம் உற்பத்தி நிலையங்கள் இயங்கிவருகின்றன. மேற்படி உற்பத்தி நிலையங்களில் உற்பத்திப் செய்யப்படும் பனம் சாராயக் கைத்தொழில் உயர் உற்பத்திச் செலவால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது.

ஒரு போத்தலின் உற்பத்திச் செலவாக 220.95 சதமும், ஒரு போத்தலுக்கான கலால் வரி ரூபா 274.75 சதமும் மற்றைய வரிகள் 29.50 விதிக்கப்படுகின்றமையால் சுமார் 575 ரூபாவிற்கு விற்பனை செய்யவேண்டிய நிலை காணப்படுகின்ற அதேவேளை கொழும்பில் இருந்துவரும் சாராயம் 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதால் பனம் சாராய உற்பத்தியாளர்கள் கொழும்புச் சாரயச் சந்தையுடன் போட்டிபோட முடியாதநிலை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் பனஞ்சாரய உற்பத்தியாளர்கள் இலாபகரமாகத் தமது பனம் சாராயக் கைத்தொழிலினை மேற்கொள்வதற்கு கலால் வரியினை 50 வீதமாகக் குறைப்பதே அதிக எண்ணிக்கையான பனை மரங்களை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதற்கும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும், குறைந்த வருமானம் பெறும் வர்க்கத்தினரின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் ஏதுவாக அமையும்.

மேலும் இவ் உற்பத்தியினை பனை அபிவிருத்திச் சபையின் கீழ் நாடு பூராகவும் அமைநதிருக்கின்ற கற்பகம் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்வதற்கு விசேட கலால் அனுமதிப் பத்திர முறையினை அறிமுகப் படுத்தல் தொடர்பாகவும் அமைச்சரவைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (27)

## மயிரிழையில் உயிர் தப்பினார்

கைதடி வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை தாயாருடன் குளித்துக்கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை 30அடி ஆழக்கிணற்றுள் தவறிவிழுந்தது. தயாரின் அவலக் குரல்கேட்டு ஓடிவந்த அயலவர்கள் செய்வதறியாது திகைத்து நின்ற வேளை அங்கு வந்த கடற் தொழிலாளியான சுப்பிரமணியம் தயாபரன் என்ற (வயது 28) இளைஞன் கிணற்றில் பாய்ந்து குழந்தையை எந்தவித ஆபத்துமின்றி காப்பாற்றினார். (19)

# புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் காப்பாளரான அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரன் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையில்

நலன்புரிச் சங்கத்தின் செயற்பாட்டிலேயே ஊழியர்களின் நலனும், பலமும் தங்கியுள்ளது. அலுவலகம் பலமானதாக இருந்தபோதும் சங்க நடவடிக்கைகள் பலவீனமாகவே உள்ளது. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய இடமே அலுவலகம். இன்றிலிருந்து பதிய உத்வேகத்துடன் செயற்படுவோம் என்றார்.

தொடர்ந்து புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.









யாழ்.இந்துக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்வில் 51ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதி கேணல் அஜித் பல்லேகம மங்கள விளக்கேற்றுவதையும், கலந்துகொண்ட விருந்தினர்களையும், பார்வையார்களில் ஒரு தொகுதியிரையும் படங்களில் காணலாம்.

# புல்லுக்குளத்தில் செந்தாமரை கொள்ளைபோகும் உள்ளங்கள்

புல்லுக்குளத்தில் இப்பொழுது செந்தாமரைகள் வீரியமாக வளர்ந்து மதாளித்துக் காணப்படுகின்றது. குளம் மூன்றில் இரண்டு மடங்கு செந்தாமரைக் கொடியால் ஆக்கிரமித்து உள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டில் புல்லுக்குளத்தை ஆக்கிரமித்து இருந்த ஆகாயத்தாமரை என்னும் ஆனைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு பெருக்கும் சல்பீனயாப் பூண்டை இல்லாமல் செய்ய யாழ்.மாநகரசபை பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்திருந்தது.

மாதக் கணக்கில் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சல்பீனியாவை அழிக்க ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் குளத்தில் இருந்த கழிவுப் பொருட்களும் சுத்திகரிக்கப்பட்டு இப்பொழுது குளம் ரம்மியமாகக் காணப்படுவதால் தினமும் அப்பகுதியில் உல்லாசப் பயணிகள் வந்துசெல்வதை கவனிக்கலாம். (68)

**தமிழைப்போல ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?**

ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**MyWay இன் சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி**

தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கான **டிப்ளோமா** பாடநெறி

**புதிய பிரிவு ஆரம்பம் : 23.04.2011 சனிக்கிழமை**

**பயிற்சிக்கான மொத்த சலுகைக்கட்டணம் : 3000/-**

**பிரிவுகள்** : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 2-3, 3-4, 4-5, 5-6

ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்

(C/697)

**MyWay** 182, Stanley Road, Jaffna
Opposite to Ceylinco Insurance
077 33 63 456, 021 2229505

# கெட்டுப்போகும் சுற்றுச் சூழல்

(கொக்குவில்)

யாழ்.மடம் வீதி, வேம்படி வீதி, பிரதான வீதி ஆகிய பகுதிகளில் வாழை, தோரணங்களின் குப்பை கூழங்கள் சிந்திக்கிடக்கின்றதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நடைபெற்ற மரணச் சடங்குக்கு வீதிகளை அலங்கரிக்கக் கொணர்ந்த வாழை, தோரணங்களே கைவிடப்பட்ட நிலையில் வீதிகளில் நிறைந்துகிடந்து போக்குவரத்திற்கு இடையூறுகளை விளைவிப்பதாகக் கூறப்படுகிறது.

வாகனங்களில் தொலை தூரங்களில் இருந்து எடுத்து வரப்பட்ட மேற்படி பொருட்களை சம்பந்தப்பட்டவர்கள் காரியம் முடிந்ததும் கைவிடப்படும் நிலையே நீடிக்கிறது.

அவர்கள் மேற்படி பொருடகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபடுவதில்லை. மறுமுறை குப்பை எடுக்கவரும் யாழ்.மாநகரசபை வாகனம் வரும்வரை வீதிகளில் கிடந்து சுற்றாடலை மாசுபடுத்துவதுடன் போக்குவரவையும் பாதிப்பதை இவர்கள் சிந்திப்பதில்லையா என மக்கள் கேள்விக்கணை தொடுக்கின்றனர். (68)

## சனியும், ஞாயிறும் மின் வெட்டு

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு (23.04.2011) சனிக்கிழமை அன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்களாக யாழ்.நகரசபைப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

ஆனால் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை அன்று இப்பிரதேசங்களுக்கான மின் தடை இடம்பெறாது.

அத்துடன் (23.04.2011) சனிக்கிழமை அன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் (24.04.2011) ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 8மணியிலிருந்து மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம தடைப்பட்டிருக்கும்.

முயற்சி செய்து மனதை எண்ணங்களில் இருந்து விடுவிக்கவேண்டும். அந்த நிலையில் தொடர்ந்து நாம் இருப்போமானால் அதுவே நமது சாதனைகளுக்கு வழிவகுக்கும். - ஸ்ரீரமணர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மக்களின் எதிர்பார்ப்புக்கள்

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வசித்துவரும் மக்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மக்களுக்கு கடந்த 4 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாததால் அவர்கள் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நிவாரணம் கிடைக்கப்பெறாத இம்மக்கள் கடந்த இரண்டு தசாப்தகாலமாக முகாம்களிலும், உறவினர்களினதும், நண்பர்களினதும் வீடுகளில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் காலத்தை கழித்து வந்துள்ளனர்.

இவர்களில் முகாம்களிலும், புகையிரத நிலையங்களிலும், அரசபொது இடங்களிலும் வசித்து வரும் நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்துவருவதாக அறியமுடிகிறது.

இந்த மக்கள் இடம்பெயர்ந்த காலம்முதல் 2010ஆம் ஆண்டு காலப்பகுதி வரை குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட புனர்வாழ்வு செயலகத்தினால் மாதந் தோறும் வழங்கப்பட்ட உலர்உணவுப்பொருட்களை நிவாரணமாகப் பெற்றுவந்தனர்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது படிப்படியாக குடியமர்த்தப் பட்டுவரும் நிலையில், இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத குடும்பங்கள் தம்மை மீளக்குடியமர்த்துவதற்கு எப்போது அனுமதிப்பார் கள் என்று ஏங்கிக்கொண்டிருக்கும் நிலையில் நிவாரணம் வழங்கப்படாதிருப்பதற்குரிய காரணம் தெரியவில்லை.

நண்பர்களினதும், உறவினர்களினதும் வீடுகளில் தங்கியிருப்பவர்களை விட, முகாம்களில் தங்கியிருப்பவர்கள் தம்வயிற்றுப்பசியை போக்குவதற்கு அன்றாடம் உழைப்பதற்குரிய வாய்ப்புக்கள் அற்ற நிலையிலேயே உள்ளார்கள்.

இதனால் அவர்களது குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதே நிலைதான் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சின் அனுமதிக்காக கடிதம் எழுதியுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்களுக்கும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாது பிற இடங்களிலும் வாழ்ந்து வரும் மக்களுக்கும் நிவாரண உதவிகள், முக்கியமாக உலர் உணவுப் பொருட்கள்வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் விரைந்து எடுக்க வேண்டும்.

நிவாரணத்தை நம்பி வாழ்ந்துவரும் இம்மக்கள், காலம் தாழ்த்தாது தம்மையும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

சுமார் இரண்டு தசாப்த காலமாக இடம்பெயர்ந்த நிலையில் வாழ்க்கையில் பல அவலங்களைச் சந்தித்த இந்த மக்களுக்கு,நான்கு மாதங்களாக உலர்உணவு நிவாரணம் வழங்காத நிலையில் அம்மக்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை அரச அதிகாரிகள் உணர்ந்து, உரிய நடவடிக் கைகளை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள் கிறோம்.

நான்கு மாதகால நிவாரணத்தை எதிர்பார்த்துக்காத்திருக்கும் இம்மக்களின் நிவாரணக் கொடுப்பனவில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி உதவவேண்டுமென மக்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

- ஆசிரியர்

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு

## நோயாளர் பெரும் சிரமம்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் அத்தியாவசியமான சில மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

குறிப்பிட்ட சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்களுக்கு வைத்தியர்கள் அம்மருந்துகளை தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் வாங்குவதற்கான சிட்டைகளை எழுதிக் கொடுத்து வருவதாகவும், நோயாளர்கள் அம்மருந்துகளை மிகுந்த சிரமத்துடன் கூடிய விலை கொடுத்து வாங்கவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது -.

குறிப்பிட்ட சில அத்தியாவசிய மருந்து வகைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுமல்ல, மாவட்டத்திலுள்ள ஏனைய அரசாங்க வைத்தியசாலைகளிலும் இல்லாதிருப்பதாகவும், இம்மருந்து வகைகளுக்கு கொழும்பு வைத்திய சாலைகளிலும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சுகாதார அமைச்சு அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்களா என நோயாளர்கள் தரப்பில் கேட்கப்படுகிறது.

இதேவேளை, வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாக உள்ள மருந்து வகைகள், தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் தாராளமாக இருப்பது எப்படி என்ற கேள்வியையும் நோயாளர்கள் எழுப்பியுள்ளதுடன், இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்றும் வினா எழுப்பியுள்ளனர். (பா)

## கிளிநொச்சிப் பகுதியில் சீரற்ற மின் விநியோகத்தால் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சீரற்ற மின்விநியோகத்தினால் திணைக்களங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் முன்னறிவித்தல் எதுவுமின்றி மின்விநியோகம் நிறுத்தப்படுவதாகவும் வார நாட்களில் மின்விநியோகம் முற்றாகத் தடைப்படுவதாகவும், இதனால் திணைக்களங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது, குறிப்பாக கணனி, போட்டோப் பிரதி போன்றவற்றை செயற்படுத்த முடியாமல் அதிகாரிகளும் பொதுமக்களும், சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட வர்த்தக நிலையங்கள் குறிப்பாக குளிர்பானம், ஐஸ்கிறீம் போன்றவற்றுக்கு மின்சாரம் அவசியம் தேவை. சீரற்ற மின்விநியோகத்தால் குறித்த உணவுப் பொருட்கள் விரைவில் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் தாம் பெரும் நஷ்டமடைவதாக வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே முன்னறிவித்தலுடன் மின்விநியோகம் தடைப்பட்டால் மாற்று நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

ஆனால் அடிக்கடி இவ்வாறு மின்விநியோகம் தடைப்படுவதைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

## சங்குப்பிட்டி - பூநகரிப் பாதை விரைவில் புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி - பூநகரி வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தபோதும், அதன் ஊடான தென்பகுதிக்கான போக்குவரத்தை இலகுபடுத்த சங்குப்பிட்டி - பூநகரி வீதி புனரமைக்கப்பட வேண்டிய தன் அவசியம் குறித்துக் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் செயலகத்தில் நடைபெற்ற யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தியதுடன், அவ்வீதியின் புனரமைப்புத் தொடர்பாகவும் கேள்வியெழுப்பியபோதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சங்குப்பிட்டி - பூநகரி வீதி விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (பா)

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மண்டப பணிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் உதவி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தெற்கு ஸ்ரீ வைதீஸ்வரா சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

வைதீஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் அதன் தலைவர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சனசமூக நிலையத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அமைச்சர் அங்கு உரையாற்றும் போது - ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலுக்கான மண்டபத்தை அமைக்கும் விதத்தில் தூண்களை நிறுவி, அதன் கட்டுமானப் பணிகளை வருடாந்த உற்சவத்திற்கு முன்னர் செய்து முடிப்பதற்கான உதவிகளை வழங்குவதாகவும் அத்துடன் அண்மையில் அப்பகுதியில் காணாமல்போன இருவர் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவ்விடயம் சம்பந்தமாக தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாட இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவ்வருடம் விளையாட்டு மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளுக்கு அமைச்சர் டக்களஸ் தேவானந்தா 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ஆர்.ஐங்கரன், கோப்பாய் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி மஹிந்த வைத்தியரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 2 ஆம் திகதி இறுதி மீள் குடியேற்றம்

### அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் ஒரு தொகுதி மக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மிதிவெடி அகற்றப்படாமல் இருந்த பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் சில இடங்கள் தற்பொழுது வெடி பொருட்கள் அகற்றப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

முன்பு இந்தப் பகுதியில் வசித்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் மெனிக்பாம் இடைநிலை நிவாரணக் கிராமத்திலிருந்து அழைத்து வரப்பட்டு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 37 ஆயிரத்து 492 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 18 ஆயிரத்து 833 பேர் மீளக்குடியேறியுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (110)

## பழமரக்கன்று விநியோகம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு சோஆ நிறுவனத்தால் பயன்தரு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றும் நேற்று முன்தினமும் குறித்த கிராம அலுவலர் பிரிவில் வைத்து மா, பலா, பப்பாசி, எலுமிச்சை போன்ற பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (110)

# வடமராட்சி வலயமட்ட பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளின் விபரம் வருமாறு:

**ஆண்கள்**

**19 வயது பிரிவு**

**எல்லே**

ஹாட்லிக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கலட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்.

**கபடி**

கலட்டி ஆர்.சி.ரிஎம்.எஸ், வேலாயுதம மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி.

**உதைபந்தாட்டம்**

ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி.

**கரப்பந்தாட்டம**

உடுப்பிட்டி ஏ.எம்.சி, சிவகுரு வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி.

**கூடைப் பந்தாட்டம்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**மென்பந்து கிரிக்கெட்**

விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி.

**சதுரங்கம்**

ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி ஏ.எம்.சி, விக்னேஸ்வராக் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**

ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம்.

**கரம்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம்.

**17 வயது பிரிவு**

**உதைபந்தாட்டம்**

இமையாணன் ஜி.ரி.எம்.எஸ், தேவரையாளி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

உடுப்பிட்டி ஏ.எம்.சி, தொண்டமனாறு வீரகத்தி மகா வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி.

**15 வயது பிரிவு**

**கரப்பந்தாட்டம**

உடுப்பிட்டி ஏ.எம்.சி, புற்றளை மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி.

**சதுரங்கம்**

ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி ஏ.எம்.சி

இப்போட்டியில் கொக்கி, ரெனிஸ், மேசைப்பந்தாட்டம், போன்ற போட்டிகள் இரண்டாம் தவணைக் காலப்பகுதிகுயில் நடைபெறும் என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.செலவக்குமரன் அறிவித்துள்ளார். (109)

## தீவக இலங்கை வங்கி கிளைகள் கணனி மயம்

(வேலணை)

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இயங்கி வருன்ற இலங்கை வங்கிக் கிளைகள் வெகு விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வங்கிகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டதன் பின் சகல வங்கிச் செயற்பாடுகளும் கணனி மூலமாக மேற கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது. (05)



யாழ்.பிரதேசப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனாகிய யாழ்.அடைக்கல அன்னை விளையாட்டுக் கழக வீரர்களுடன பங்குத்தந்தை வண.ரெஜி இராஜேஸ்வரன் அடிகள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (68)

## குன்றும் குழியுமாகக் காணப்படும் ஆஸாத், ஜின்னா வீதிகள்

(மானிப்பாய்)


யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஆஸாத் வீதி, ஜின்னா வீதிகள், நீண்டகாலமாக செப்பனிடப்படவில்லை.

இப் பிரதான வீதி நடமாட முடியாத அளவில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றன. துவிச்சக்கரவண்டியில் செல்வது மிகவும் ஆபத்தாக உள்ளது. வாகனங்களில் நோயாளர்கள் செல்லும் போது பள்ளத்தில் வாகனங்கள் வீழ்ந்து செல்வதனால் நோயளர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மழை காலங்களில் நீர் தேங்கிநிற்பதனால் தொற்று நோய்க் கிருமிகள் பெருகி டெங்குநோய் போன்ற நோய்கள் வர வாய்ப்புண்டு.

அதேவேளை மானிப்பாய் வீதியிலுள்ள பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள பி.எஸ்.லேன் கல்,மண் நிரப்பப்பட்டு சீரமைக்கும் பணி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.. (19)

# வாகனம் செலுத்துபவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள்



**மோட்டார் வாகனம் செலுத்துபவர்களின் தகுதி**

1. மோட்டார் வாகனச் சாரதிகள் தாங்கள் தகுந்த நிலையிலிருந்தாலன்றி குடிபோதையில் இருக்கும் போதும், சோர்வாக இருக்கும் போதும், உணர்ச்சி வசப்பட் டநிலையில் இருக்கும் போதும் வாகனத்தைச் செலுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

2. வாகனத்தைச் செலுத்து முன் வாகனம் பொறிமுறை ரீதியில் சீராக உள்ளதா? என்பதையும்,பொறிமுறைத் தடுப்புகள், டயர்கள், விளக்குகள், ஒலிக் கருவிகள், காற்றுத் திரைத் துடைப்புக்கள், சைகை ஒளிச் சமிக்ஞைகள் சரியான நிலையில் உள்ளதா? என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3. தாங்கள் செலுத்தும் வாகனத்தை செலுத்துவதற்குரிய செல்லளவைக் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பனவற்றோடு ஆகக் குறைந்தது பிறநபர் காப்புறுதிச் சான்றிதழ் வாகனத்தின் பெயரில் இருத்தல் வேண்டும்.

4. வாகனத்தைச் செலுத்துமுன், தங்கள் வாகனத்தில் ஆசனப்பட்டிகள் பொருத்தப்பட்டிருப்பின் அணிந்து கொள்ளுதல் வேண்டும். முறையாக அணியப்பட்ட ஆசனப் பட்டிகளால் விபத்துக்களின் போது ஏற்படும் காயங்கள் பெருமளவு குறையலாம்.

5. வாகனத்தைச் செலுத்தும்போது அது தொடர்பான அவசிய செயற்பாடுகள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் எப்பொழுதும் இரு கைகளையும் கைபிடிச்சட்டத்தில் அல்லது செலுத்தும் சில்லில் வைத்திருத்தில் வேண்டும்.

6. பெரும்பாலான விபத்துக்கள் சந்திகளில் அல்லது ஊடறுக்கும் வீதிகளிலேயே நடைபெறு கின்றன. சந்தியை ஊடறுக்கும் பாதசாரிகள் வாகனப் போக்கு வரத்து என்பனபற்றி விசேட கவனம் செலுத்துதல் வேண் டும். இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்பும் வாகனங்கள் நேராகச் செல்லும் வாகனங்களுக்கு வழி விடுதல் வேண்டும்.


7. கடமையிலிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அல்லது போக்குவரத்து சமிச்ஞைகளால் கொடுக்கப்படும் கட்டளைகளை, பணிப்புக்களை எப்பொழுதும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

8. முந்திச் செல்லும் போது வலது பக்கம் திரும்பும் சமிக்ஞை காட்டி ஏனைய போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையிலும், ஏனையோருக்கு ஆபத்தை விளைவிக்காத வகையிலும் விரைவாக முந்திச் செல்ல முடியுமானால் மட்டும் முந்திச் செல்லுதல் வேண்டும். ஏனைய வேளைகளில் முந்திச் செல்லுதல் கூடாது. வேறு ஒரு வாகனம் உமது வாகனத்தைக் கடந்து செல்லும் போது உமது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து பாதையில் இடம் கொடுக்கவும்,

பாதசாரிகள் மாறும் இடம் கடும் வளைவு, பாலம், சந்தி, குறுகலான பகுதி, சமிக்ஞை கட்டுப்பாட்டினால் குறிக்கப்பட்ட இடம், மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பிரதேசங்கள், ஆகிய பகுதிகளில் அல்லது அவ்விடங்களை நெருங்கும் போது வேறு வாகனங்களைக் கடக்க முந்திச் செல்வதை தவிர்த்தல் வேண்டும்.

10. மோட்டார் சைக்கிள் ஓடடுபவர், பின்னால் அமர்ந்திருப்பவர் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும். பின்னால் அமர்ந்து செல்பவர்கள் தமது இரு கால்களையும் இரண்டு பக்கமும் வைத்து அமர்ந்து செல்லுதல் வேண்டும். ஒரு பக்கமாக அமர்ந்து செல்லுதல் கூடாது.

**போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதற்கான ஒளிச் சமிக்ஞைகள் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களில் வாகன ஓட்டுநர்கள் செயற்படவேண்டிய முறைகள்**



1. **சிவப்பு வெளிச்சம:**

வாகனத்தை நிறுத்த வேண்டும் என்பதைக் குறிக்கும். அப்பொழுது வாகனத்தை வண்டிப் பாதையில் நிறுத்தல் கோட்டிற்கு அப்பால் நிறுத்தல் வேண்டும்.

2. **சிவப்பும், செம்மஞ்சளும் ஒரே நேரத்தில் எரியும் போது:**

நிற்பாட்டல் வேண்டும் என்பதுடன் பச்சை வெளிச்சம் வரப் போகின்றது. பச்சை வெளிச்சம் வந்ததும் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

3. **செம்மஞ்சள்:**

சிவப்பு வெளிச்சத்துக்கான மாற்றம் ஏற்படப் போகின்றது. எனவே, வாகனத்தை, வண்டியை நிறுத்தும் கோட்டிற்கு அப்பால் நிறுத்து என்பதைக் குறிக்கும்.

4. **பச்சை:**

பச்சை ஒளியை நோக்கி வாகனம் நேராகச் செல்லலாம் அல்லது பாதுகாப்பாக உள்ளதாயின் இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்பிச் செல்லலாம் என்பதைக் குறிக்கின்றது.

5. **பச்சை அம்புக்குறி:**

பச்சை ஒளி அம்புக்குறியானது சிவம்பு ஒளிச் சமிக்ஞையுடன் காட்டப்படும் போது பச்சை அம்புக்குறியினால் காட்டப் பட்ட பக்கத்திற்கு வாகனங்கள் செல்லலாம் என்பதைக் குறிக் கும்.

6. **விட்டு விட்டெரியும் செம்மஞ்சள்:**

சந்தியில் வாகனப் போக்குவரத்து தற்காலிகமாக ஒளிச் சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதனைக் குறிக்கும். எனவே சாதாரண சந்திக்குப் பொருத்தமான வீதிப் போக்குவரத்து விதிகளுக்கு அமையச் செயற்படுதல் வேண்டும்.

8. **சந்திப் பெட்டியைக் குறிக்கும் மஞ்சள் குறியீடு:**

சந்திப் பெட்டியைக் குறிக்கும் மஞ்சள் குறியீடு காணப்படின் நீங்கள் வெளியே செல்லும் வீதி இடையூறு எதுவுமின்றி இருந்தாலொழிய அப் பெட்டிக்குள் செல்லுதல் கூடாது. ஆனால் நீங்கள் வலது பக்கம் திரும்ப உத்தேசித்து, ஏனைய மற்றைய வாகனங்களினால் தடை செய்யப்படும் நேரத்தில் மட்டுமே பெட்டிக்குள் நிலையாக நிற்கமுடியும்.

# யாழ், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

மன்னாருக்கு வடக்கான கடற்பரப்பிலும் தீவுப்பகுதிக்கு தெற்கான கடற்பகுதிகளிலும் களங்கட்டி, சிறகுவலைத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் யாழ. மாவட்ட மீனவர்களதும், கிளிநொச்சி, மன்னார், மாவட்ட மீனவர்களதும் தொழில் நடவடிக்கையின்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து கடந்த திங்கட்கிழமை பூநகரியில் நடைபெற்ற கடற்தொழிலாளர் சமாச மட்டக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

பூநகரி பரமன்கிராய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சமாச மட்டக் கலந்துரையாடலை பூநகரி கடற்தொழிலாளர் சமாசம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் பூநகரி கடற்தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதி, யாழ். கடல் நீரேரி கடற்தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம், கிளிநொச்சி கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிநிதி முதலானோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேச மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. இம் மூன்று மாவட்ட மீனவர்களினதும் மீன்பிடித் தொழில் நடைமுறைகள் குறித்து ஏற்கனவே இருக்கின்ற சட்ட விதிமுறைகளை மாற்றி, புதிய சட்ட விதிமுறைகளை எடுவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் மாவட்ட மீனவர் சமாசங்களிடையே பொதுவான இணக்கபாடு காணும் நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி கூடி இவ்வாறான இணக்கப்பாட்டினை யாழ். மன்வர் சங்கங்கள் எட்டவுள்ளன.

அத்துடன், மன்னார் மாவட்டத்திலும் மீனவர் சமாசங்களிடையே இணக்கப்பாடு எட்டப்பட்டு இறுதியாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு ஒரே மாதிரியான கடற்தொழில் சட்ட விதிமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (பா)

# கம்பன் விழாவின் இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் தலைமையுரையை கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன், தொடக்கவுரையை வேலூர் கம்பன் கழகத் தலைவர் எஸ்.என்.குப்புசாமி முதலியார், கம்பன் கண்ட சமதத்துவமும் சகோதரத்துவமும் என்னும் பொருளின் தனியரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த தவத்திரு ஊரன் அடிகளார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ‘வாதநுட்பம் பெரிதும் வெளிப்படுவது’ என்னும் பொருளில் விவாத அரங்கு இடம்பெறவுள்ளது. இதில் நடுவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த புலவர் இரா. சண்முகவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் மாலை நிகழ்வுகள் 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தலைமையுரையை யுனைட்டட் பார்சல் சேவிஸ் பணிப்பாளர் ஏ.கந்தசாமி, தொடக்கவுரையை புதுவை கம்பன் கழக செயலாளர் தி.முருகேசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பாசம் கடந்து பெரிதும் தேசத்தை நேசித்தவள்’ என்னும் விடயம் பற்றிப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. இதில் நடுவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சோ.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (10)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் உலக உணவுத் திட்ட அனுசரணையில் கட்டப்பட்ட சமையல் அறையை நிறுவன சிரேஷ்ட தலைமை அலுவலர் வி.ஜெயரூபன் திறந்து வைப்பதையும், பாடசாலை அதிபர் த.சிவகடாட்சம் அருகில் நிற்பதையும் காணலாம். (104)

# காணி அலுவலர் கடமையில் இல்லை ஏமாற்றத்துடன் திரும்பும் பொதுமக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற காணி அலுவலர்கள் வேறு வேலைகள் நிமித்தம் அடிக்கடி அலுவலகத்தை விட்டு வெளியில் சென்றுவிடுவதால், காணிப் பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு வரும் மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மீள்குடியேறிய பிரதேசங்களில் காணிப்பிரச்சினையே அதிகமாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில் பெருமளவான மக்கள் பிரதேச செயலகங்களுக்கு காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வருகின்ற நிலையில், கடமையில் இருக்கின்ற ஒரு சில காணி உத்தியோகத்தர்களும் பழமரக்கன்றுகள், விதை தானியங்கள் வழங்குதல் என அடிக்கடி வெளியில் சென்றுவிடுவதால், மக்கள் பல தடவைகள் அலைந்து திரிவதோடு, குறிப்பாக தூர இடங்களிலிருந்து வரும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிகிறது.

காணி உத்தியோகத்தர்கள், மாகாண காணி கால்நடை விவசாய அமைச்சின் கீழ் வருவதனால் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதாகவும், இதனால் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சில தடங்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (29)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(22.04.2011 – வெள்ளிக்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்
சித்திரை 9 ஆம் நாள்.
இராகுகாலம் 10.31–12.01, சுபநேரம் 6.01 –7.31,
நட்சத்திரம் கேட்டை மு.ப. 10.05 வரை,
திதி: பஞ்சமி பி.இ. 1.04 வரை.
பெரிய வெள்ளி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** அதிக செலவு, வீண்பயம், நண்பர் சேர்க்கை.

**ரிஷபம்:–** பண வரவு, நல்ல செய்தி, காரிய அனுபவம்.

**மிதுனம் :–** வீண் செலவு, நண்பர் பகைமை, உட்பகை.

**கடகம்:–** தேக சுகம், காரிய சித்தி, பணச் செலவு.

**சிம்மம்:–** யோசனை மிகுதி, வீண் பயம், பண வரவு.

**கன்னி :–** அதிக செலவு, பெரியோர் ஆசி, காரிய அனுகூலம்.

**துலாம் :–** பண வரவு, பெரியோர் ஆசி, காரிய அனுகூலம்.

**விருச்சிகம்:–** கடின உழைப்பு, நல்ல செய்தி, விருந்தினர் வருகை.

**தனுசு:–** மனக்குழப்பம், வீண் செலவு, காரியத்தடை.

**மகரம்:–** அதிக செலவு, உட்பகை, காரிய அனுகூலம்.

**கும்பம் :–** வீண் அலைச்சல், காரியத்தடை, அதிக செலவு.

**மீனம்:–** யோசனை மிகுதி, காரிய அனுகூலம், பண வரவு.

# வன்னியில் நடைபெறவுள்ள சித்திரைப் புத்தாண்டு விழா

(வவுனியா)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழா இன்று முதல் 24 ஆம் திகதி வரை முறையே முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இன்று முல்லைத்தீவிலும், நாளை கிளிநொச்சியிலும், வவுனியாவில் 24 ஆம் திகதியும் புதுவருட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இறுதிநாளான 24 ஆம் திகதி இரவு வவுனியா நகரசபை மைதானத்தில் உள்ளூர் கலைஞர்கள் பங்கு பற்றும் இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்த வைபவங்களில் நாளை அமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்டச் செயலகங்களின் ஒத்துழைப்புடன் படையினர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொத.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

இங்கு மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், கல்வி முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்களிப்பு தொடர்பாகவும், கிராம அபிவிருத்தியில் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியம் தொடர்பானதுமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் நிதியுதவியுடன் நடைபெற்ற இக் கௌரவிப்பு நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை அமைப்பாளர் காந்தன், தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், புலம்பெயர் வாழ் தமிழர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வெற்றிபெற்ற வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கிக் கௌரவிப்பதையும், அருகில் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் நிற்பதையும், விளையாட்டு நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (11)

# இலங்கைக்காகத் தாமதமான ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை

(கொழும்பு)

**ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கை மார்ச் 31ம் திகதியே தயாரிக்கப்பட்டு விட்டபோதும், இலங்கைக்காகவே அதை பான் கீ மூனிடம் கையளிப்பது தாமதமாகியது என்று இன்னர் சிற்றி பிரஸ் கூறியுள்ளது.**

ஐ.நா நிபுணர்கள் குழு சமர்ப்பித்த அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியின் பகுதி இன்னர்சிற்றி பிரசுக்கு கிடைத்துள்ளது.

அதில் நிபுணர்கள் குழுவில் இடம் பெற்றுள்ள மூவரும் மார்ச் 31ஆம் திகதியிட்டு ஒப்பமிட்டுள்ளனர். ஆனால் அந்த அறிக்கை ஏப்ரல் 12ம் திகதியே பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரதி ஏப்ரல் 13ஆம் திகதி ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிடம் கையளிக்கப்பட்டது.

இன்னர் சிற்றி பிரஸ் கடந்த 19ஆம் திகதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுடனும் பாலித கொஹன்னவுடனும் கலந்துரையாடியது. பாலித கோஹன்னவின் இல்ல வரவேற்பறையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அப்போது, இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்று ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் கூறியிருப்பினும், பொதுமக்கள் மத்தியில் அது வெளியிடப்படக் கூடாது என்று பாலித கோஹன்ன வாதிட்டார்.

ஐ.நா இந்த அறிகையை இன்னமும் ஏன் வெளியிடவில்லை என்று பாலித கோஹன்னவிடம் கேட்டபோது, இது பொதுமக்களுக்குத் தேவையற்றது என்று கூறினார். இந்த அறிக்கை ஐ.நா பொதுச்செயலருக்கானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நாவுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை 36 மணி நேரம் காலஅவகாசம் கோரிய போதும் இதுவரை பதிலளிக்காதது ஏன் என்று பாலித கோஹன்னவிடம் கேட்டபோது, 195 பக்கங்கள் கொண்ட அறிக்கைக்கு 36 மணி நேரத்தில் எவ்வாறு பதிலளிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

கடந்தவாரம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்ட பின்னர், கடந்த புதன் கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் விடுமுறை நாட்கள்.

அதன் பின்னர் கடந்த திங்களன்று பூரணை நாள் விடுமுறை என்றும் அவர் கூறியுள்ளார்.

இன்னர் சிற்றி பிரஸ் பாலித கோஹன்னவை அவரது வதிவிடத்தில் சந்திக்க முன்னர், எகிப்தின் ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பரதிநிதி மஜெட் அப்டிலாசிஸ் அங்கு சென்று கோஹன்னவுடனும், சவீந்திர சில்வாவுடனும் கலந்துரையாடியுள்ளார்.

எகிப்து தான் பொதுநலவாய நாடுகளுக்குத் தலைமை வகிக்கிறது.

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா பொதுச்செயலரின் முயற்சிகளுக்கு எதிராக அழுத்தங்கள் கொடுப்பது பற்றியே இவர்கள் பேசியுள்ளதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் கூறியுள்ளது.

## நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக 10 இலட்சம் கையொப்பம் திரட்ட முடிவு



(கொழும்பு)

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக 10லட்சம் கையொப்பங்கள் திரட்டப்பட உள்ளது. அரசாங்கத்திற்கும், படையினருக்கும் எதிராக நிபுணர்குழு அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், இதற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் 10லட்சம் கையொப்பங்கள் திரட்டப்படவுள்ளதாகவும் தனியார் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க தலைமையில் இந்தக் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. கொழும்பு பெஸ்ரியன் வீதியில் நாளைய தினம் முற்பகல் 10மணியளவில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இதன்போது கையெழுத்துப்பெறும் நடவடிக்கையும் ஆரம்பமாகவுள்ளது. நாடளாவிய ரீதியில் இந்நடவடிக்கை தொடருமென்று அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலகத்திற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

**அரசாங்கம் அறிவிப்பு**

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் காரியாலயத்திற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடைபெறக் கூடுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான போராட்டங்களின் போது தமது பணியாளர்களது பாதுகாப்பை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தி இருந்தது.

இதன்படி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக் காரியாலயத்திற்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

காரியாலயத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக மேலதிகமாக காவல் துறையினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட பொலிஸ் காவலரண் அகற்றப்படமாட்டாது

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள இலங்கை பொலிஸ் காவலரண் ஒரு போதும் அகற்றப்படமாட்டாது என்று இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள்,விரிவுரையாளர்கள்,மாணவர் களுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீங்கள் பிறக்கும்போதே வடகிழக்கில் நிலவிய போர்ச் சூழ்நிலையில்-தென்பகுதியுடன் தொடர்பான ஒரு பயம் ஒரு பீதியுடன் தான் பிறந்துள்ளீர்கள்.

இந்தப் பிரச்சினைகளை எமது மனங்களில் இருந்து அகற்றிக் கொள்வதற்கு சிறிது காலம் செல்லும்.

ஒரு குழந்தை பிறந்து வளரும் சூழலுக்கு ஏற்றால் போல் தான் அந்த குழந்தையின் நடவடிக்கையும் அமையும். அதேபோல் படித்த, வாழ்ந்த சூழ்நிலையைக் கொண்டுதான் நாங்கள் எடுக்கின்ற தீர்மானங்களும் அமைந்திருக்கும்.

இலங்கை இராணுவத்தினருடன் நேருக்கு நேர் நின்று போர்புரிந்த பிரதியமைச்சர் முரளிதரன், தனது மனதை மாற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

ஏனென்றால் அவர் பிறந்தது ஒரு ஐக்கிய இலங்கைக்குள். அவருக்கு இலங்கை தொடர்பாகவும் சிங்கள மக்கள் தொடர்பாகவும் நன்றாகத் தெரியும். அதனால் அவரது மனதை அவர் மிகவிரைவாக மாற்றிக் கொண்டார்.

ஆனால் அந்த அனுபவம், அந்த உணர்வு சிறிதளவேனும் உங்களிடம் இல்லை.

இலங்கைப் பொலிஸார் இங்கிருப்பது சிங்கள மாணவர்களுக்காக மட்டுமல்ல. சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் காவலரண் இருக்கிறது.


பொலிஸ் என்பது பிசாசுகள் அல்ல. கொள்ளையடித்தால்,பயங்கரமான வேலைகளைச் செய்தால், குண்டுகள் தயாரித்தால் அவர்களைப் பார்த்து பயப்படலாம்.

நீங்கள் இலங்கை பொலிஸ் காவலரண் இருப்பதை ஒரு பிரச்சினையாக எடுக்கக் கூடாது.

பொலிஸாரின் காவலரண் அகற்றப்பட்டால், இங்கு இராணுவத்தை நிறுத்த வேண்டும், அல்லது விமானப்படையையோ, சிறப்பு அதிரடிப்படையினரையோ நிறுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# தனியார் ஓய்வூதிய சட்டமூலத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை

(கொழும்பு)



தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் தொடர்பான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மேற்படி சட்டமூலம் இம்மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்வரும் 24ஆம் திகதி அதன் மீதானவிவாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 75 லட்சம் தனியார்துறை ஊழியர்களை அரசாங்கம் ஏமாற்ற முயற்சிப்பதாக ரவி கருணா நாயக்க டெய்லி மிரருக்கு தெரிவித் தார்.

“ஊழியர்களுக்கு அரசாங்கம் நன்மைகளை வழங்க விரும்பினால் அரசாங்கம் அதன் சொந்தப் பணத்தை பயன்படுத்த வேண்டும். ஆனால் அவர்கள் (அரசாங்கம்) தொழிலாளர்களின், ஊழியர்களின் சேமலாப நிதிய பணம், ஊழியர் நம்பிக்கை நிதியப்பணம் ஆகியவற்றை எடுத்து மீண்டும் தொழிலாளர்களுக்கு வழங்க முற்படுகிறார்கள். அப்படிச் செய்ய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை” என ரவி கருணா நாயக்க கூறினார்.

“இத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவதற்கு ஊழியர்கள் 10 வருடங்கள் பங்களிப்பு வழங்க வேண்டும். 9 வருடங்கள் அதை செய்தால் எதுவும் கிடைக்காது. அதனால்தான் இதை நாம் ஒரு ஏமாற்று நடவடிக்கை என்கிறோம்" எனவும் அவர் தெரிவித்தார்.

# “சொல்லப்படாத செய்திகள்” நூல் இராணுவத் தளபதியால் வெளியீடு

(கொழும்பு)



இலங்கை இராணுவத்தின் கிழக்குப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா சிங்களத்தில் எழுதியுள்ள சுயசரிதை நூல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

“அபி பிமக்க ஹத்த கஸ்ம” (போர் முனையில் ஒரு இதயத்தின் துடிப்பு) என்ற தலைப்பிலான இந்த நூலை கொழும்பு மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய வெளியிட்டு வைத்தார்.

இந்த நூலில் இலங்கை இராணுவத்தின் முக்கியமான படை நடவடிக்கைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், புலிகளுடனான போரில் இலங்கைப் படையினர் எதிர்கொண்ட சிக்கல்கள் குறித்தும் விபரிக்கப்பட்டுள்ளது.

இளநிலை அதிகாரியான கோப்ரல் சஞ்சய பண்டாரவின் கோணத்தில் இருந்து இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

போரில் மரணமான படையினருக்கு இந்த நூலை மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா காணிக்கையாக்கியுள்ளார்.

களமுனையில் இலங்கை இராணுவத்தின் அனுபவங்கள் பற்றிக் கூறும் முதலாவது நூல் இது என்பதும், இதில் இதுவரை சொல்லப்படாத பல செய்திகள் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பெங்களூர் அணியில் கெய்ல்



பெங்களூர் ராயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த திர்க் நேனஸ் காய மடைந்துள்ளார். அவருக்குப் பதிலாக மேற்கிந்தியதீவு அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் பெங்களூர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல்.இல் விளையாட மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையிடம் இருந்து தடையில்லா சான்றிதழையும் கெய்ல் பெற்றுள்ளார். இந்தத் தகவலை பெங்களூர் அணியின் உரிமையாளர் விஜய் மல்லையா உறுதிப் படுத்தியிருக்கிறார்.

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஏலத்தில் கெய்லை எந்த அணியும் வாங்கவில்லை. ஐ.பி.எல். நடந்து கொண்டிருக்கும் போது, அவர் சர்வதேச போட்டிக்குச் சென்று விடுவார் என்பதால் அவரை யாரும் சீண்டவில்லை.

இந்த நிலையில் இரு தினங்களில் உள்ளூரில் தொடங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இரு ஒரு நாள் தொடரில் பங்கேற்கும் மேற்கிந்தியத்தீவு அணியில் கெய்லுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அத்துடன் டெஸ்ட் தொடரிலும் பங்கேற்பதில்லை என்றும் முடிவு செய்து விட்டார். இதன் பின்னரே அவரை பெங்களூர் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

## அதிருப்தியில் கிரிக்கெட் சபை

நாட்டை விட ஐ.பி.எல். போட்டிக்கு முன்னுரிமை கொடுக்கும் கெய்லின் நடவடிக்கை மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபைக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். போட்டியில் சிக்கலின்றி விளையாடுவதற்காக கெய்ல், மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தப் பட்டியலில் கையெழுத்திட ஏற்கனவே மறுத்து விட்டார். அத்துடன் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தன்னால் ஆட முடியாது என்றும் கூறி இருக்கிறார்.

இது பற்றி மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை கூறுகையில், பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தன்னால் விளையாட முடியாது என்பதற்கு கெய்ல் சொன்ன காரணம் ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. ஆனால் இந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு கெய்ல் வந்து விட்டார். எனவே அவரது விருப்பத்திற்கு குறுக்கே நிற்க நாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளது.

## எனது முடிவுக்கு சபையே காரணம்


மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையின் அணுகுமுறையே 2011 ஐ.பி.எல். போட்டிக்காக றோயல் சலஞ்சர்ஸ் அணியில் இணைய வேண்டிய நிலையை எனக்கு ஏற்படுத்தியுள்ளது என அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏற்பட்ட காயம் காரணமாக அணியில் இருந்து கிறிஸ் கெய்ல் விலகியிருந்தார்.

இந்நிலையில் மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டித் தொடருக்கு மேற்கிந்தியத்தீவு அணி விபரத்தை அதன் கிரிக்கெட் சபை வெளியிட்டது. இதில் தனது பெயர் இடம் பெறாமை தனக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக கெய்ல் தெரிவித்தார்.

இது தொடர்பாக தொலைக்காட்சி ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில், காயத்தில் இருந்து மீண்டு பூரண குணமடைந்து, பயிற்சிகளை ஆரம்பித்துள்ளேன். எனினும் மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை நிர்வாகத்தினர் என்னுடன் தொடர்புகொள்ளவில்லை. பத்திரிகைச் செய்தி ஊடாகவே அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதை அறிந்தேன். இது எனக்கு அதிர்ச்சி அளித்தது. காயத்திலிருந்து குணமடைந்துள்ள நான் விரைவில் போட்டிகளில் பங்குபற்ற விரும்பினேன். மேற்கிந்தியத்தீவு அணியில் விளையாடுவதையே முதன்மையாகக் கருதினேன். அதுவே என் பிரதான இலக்கு. அது சாத்தியப்படாது போனால் வேறு முடிவுகள் எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டேன் எனத் தெரிவித்தார்.

# நாடு திரும்பாவிட்டால் நடவடிக்கை



காயம் காரணமாக இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளில் தன்னால் விளையாட முடியாது என லசித் மலிங்க, ஐ.பி.எல். தொடரிலிருந்து நாடு திரும்பாவிட்டால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


இங்கிலாந்து சுற்றுப்பயணத்துக்குத் தன்னால் வரமுடியாது எனக் கூறியிருந்த லசித் மலிங்க, ஐ.பி.எல்.இல் தொடர்ந்து விளையாட விருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது இலங்கை கிரிக்கட் சபை அதிகாரிகளுக்கு சந்தேகத்தை உண்டாக்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே 26ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டிகளில் தன்னால் விளையாட முடியாது என இலங்கை கிரிக்கட் சபைக்கு மலிங்க கடிதம் எழுதியிருப்பதாக தேர்வுக் குழுவின் புதிய தலைவர் துலிப் மெண்டிஸ் தெரிவித்தார்.

காயம் ஏற்பட்டதாகக் கூறுபவர், ஐ.பி.எல் இல் தொடர்ந்து விளையாடுவது முறையானதாகத் தெரியவில்லை. எனவே தான் சிகிச்சை பெற்றவுடன் நாடு திரும்புமாறு மலிங்கவுக்கு கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளோம் என்றார் அவர்.

இதனிடையே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும் முன்னர் மலிங்கவின் பதிலுக்காகக் காத்திருக்கப் போவதாக தலைமைத் தேர்வுக் குழுவினர் தெரிவித்தனர்.

## மீண்டும் ஆசை



(லண்டன்)

இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பை மீண்டும் பொறுப்பேற்க விரும்புகின்றேன் என இங்கிலாந்து அணியின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தலைவராக இருந்த பீற்றர்சன், அப்போதைய பயிற்சியாளர் பீட்டர் மூர்ஸடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தலைவர் பதவியில் இருந்து விலகினார்.


இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு வாரங்களாக ஒரு நாள் போட்டிக்கான தலைவர் பதவியில் இருந்து ஸ்டிராஸ் விலகவுள்ளதாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன. அவர் விலக நேரிட்டால், அந்தப் பதவியை ஏற்கத் தயாராக உள்ளேன்.

இரண்டாவது முறையாக தலைவராகும் பட்சத்தில் அந்தப் பணியைச் சிறப்பாக செய்ய முடியும். சிறப்பான முறையில் அணியை வழிநடத்த முடியும். தலைவர் பதவியை ஏற்குமாறு அணி நிர்வாகம் என்னைக் கேட்டுக்கொண்டால், ஏற்றுக்கொள்வேன் என்றார்.

கடந்த சில வாரங்களாக இங்கிலாந்துத் தலைவர் ஸ்டிராஸ் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக ஒரு நாள் போட்டிக்கான தலைவர் பதவியிலிருந்து விலகவுள்ளார் என செய்திகள் வெளியாகி வருவது குறிப்பிடத்தக்கது.

## கனவே கலையாதே



(கொல்கத்தா)

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் என்னுடைய கனவு தகர்ந்துவிடவில்லை. இந்த ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: இலங்கை அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இதனால் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் இலங்கை வீரர்களை நாடு திரும்புமாறு அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதனால் கொச்சி அணியின் தலைவராகும் வாய்ப்பு கங்குலிக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தான் ஐ.பி.எல். போட்டியில் ஆட வாய்ப்புள்ளதாக கங்குலி சூசகமாகத் தெரிவித்தார்.


## நாங்களும் போட்டிக்குத் தயார்

(புதுடில்லி)

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு கடும் போட்டி நிலவி வருகின்றது. இந்நிலையில் நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீபன் பிளமிங் மற்றும் இங்கிலாந்து டங்கன் பிளச்சர் ஆகியோரும் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கான போட்டியில் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிர்ஸ்டனின் விலகலைத் தொடர்ந்து புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்ய வேண்டிய நிலையில் இந்திய கிரிக்கெட் சபை உள்ளது. ஐ.பி.எல். போட்டி முடிந்த பின்னர் பயிற்சியாளர் யார் என்பதை முடிவு செய்யும்.

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கான போட்டியில் ஸ்டீபன் பிளமிங், டங்கன் பிளச்சர் ஆகியோர் இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஸ்டீபன் பிளமிங் நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர், ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளராக உள்ளார்.



பிளமிங் 10 ஆண்டுகளாக நியூசிலாந்து அணியின் தலைவராக இருந்துள்ளார். 111 டெஸ்ட், 280 ஒருநாள் போட்டியில் விளையாடியுள்ளார். 80 டெஸ்டுக்குத் தலைவராக இருந்து 28 டெஸ்டில் வெற்றி பெற்றுள்ளார். 218 ஒருநாள் போட்டியில் 98 ஆட்டத்தில் வெற்றி கிடைத்தது. 38 வயதான அவர் இந்திய அணியின் பயிற்சியாளராக அதிக ஆர்வத்துடன் உள்ளார். 62 வயதான டங்கன் பிளச்சர் இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஆவார்.

2005ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி ஆஷஸ் கிண்ணத்தை வெல்ல இவர் முக்கிய காரணமாக இருந்தார். சமீபத்தில் அவர் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட ஆலோசகராகப் பணி புரிந்தார்.

இதேவேளை, அன்டி பிளவரும் இப்போட்டியில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.













கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளைக் காணலாம். 1ஆம் இடத்தை தேராவில் இந்து ம.வியும், 2ஆம் இடத்தை பூநகரி ம.வியும், 3ஆம் இடத்தை இராமநாதபுரம் கிழக்கு ம.வியும் பெற்றுக் கொண்டன. (12)

# எகிப்தில் புரட்சியில் ஈடுபட்ட மக்களை சுட்டுக்கொல்லுமாறு முபாரக் உத்தரவு

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை

(கெய்ரோ)

எகிப்தில் கடந்த ஜனவரி மாதம் நடத்தப்பட்ட மக்கள் புரட்சியில் ஈடுபட்டவர்களைச் சுட்டுக் கொல்லும்படி அப்போதைய எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் தான் உத்தரவிட்டார் என்று உண்மை கண்டறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எகிப்தில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி முதல் 18 நாட்கள் அப்போதைய ஜனாதிபதி முபாரக்கிற்கு எதிராக மக்கள் புரட்சி நடந்தது. அப்புரட்சியை அடக்க துப்பாக்கிச் சூடு, தனது ஆதரவாளர்கள் மூலம் தாக்குதல் எனப் பல்வேறு வழிகளைக் கையாண்டும் இறுதியில் பதவியை விட்டு விலக வேண்டியவரானார் முபாரக். இந்தப் புரட்சியில் 846 பேர் பலியாகினர். அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள இராணுவ அரசு, ஜனவரி 25 புரட்சிக் காலத்தில் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய உண்மைக் கண்டறிய நீதிபதிகள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு, 17 ஆயிரத்து 58 அதிகாரிகள் மற்றும் சாட்சிகள், 800 வீடியோ சாட்சிகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றின் மூலம் மக்கள் மீதான தாக்குதல் பின்னணியைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டது. நேற்றுமுன்தினம் அக்குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்து அதனை வெளியிட்டது.

குழுத் தலைவர் நீதிபதி ஓமர் மார்வான் இதுபற்றிக் கூறியதாவது:

மக்கள் புரட்சியை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு முபாரக், பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

தாரிக் சதுக்கத்தில் குவிந்திருந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும்படி அவர் உத்தரவிட்டார். பொலிசார் மக்களின் தலை மற்றும் நெஞ்சுப் பகுதிகளைக் குறிபார்த்துச் சுட்டுத் தள்ளினர்.

குண்டடி பட்டும் சாகாதவர்களின் முகத்தைச் சிதைத்து, கணகளைத் தோண்டி எடுத்துள்ளனர பொலிசார். குண்டடியில் தப்பிப் பிழைத்தோரில் பெரும்பான்மையோர் கண்களை இழந்திருப்பது இதற்குச் சாட்சி.

பொலிஸ் துறையின் ஒரு பகுதியான பயங்கரவாத எதிர்ப்புப் படையினர் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.


மக்களைக் கொல்ல வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பொலிசார் தங்கள் வாகனங்களை அவர்கள் மீது ஏற்றிக் கொலை செய்துள்ளனர்.

மதுபோதையில் இருந்த பொலிசார் மற்றும் அதிகாரிகள், ஒட்டகம், மற்றும் குதிரைகளில் ஏறி திடீரென தாரிக் சதுக்கத்திற்குள் புகுந்து மக்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கியுள்ளனர்.

நாட்டின் 41 சிறைகளில் 11 சிறைகளில் இருந்து கைதிகள் தப்பியதில், பாலஸ்தீன நாட்டின் ஹமாஸ் இயக்கம் மற்றும் லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா இயக்கம் இரண்டுக்கும் தொடர்புள்ளது. தப்பிய கைதிகள் எரிகிற தீயில் எண்ணை ஊற்றியது போல தாக்குதலில் இறங்கியுள்ளனர்.

இந்தக் கைதிகள் கடைகளுக்குத் தீ வைத்துக் கொள்ளையிட்டபோது, முபாரக்கின் ஆலோசனைப்படி பொலிசார் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அதன் மூலம் மக்களிடையே பீதியை ஏற்படுத்தி புரட்சியை நசுக்கிவிடலாம் என்று அவர் எண்ணியிருக்கிறார்.

ஊழல், விலைவாசி உயர்வு போன்ற காரணங்கள் தவிர, முபாரக் தனது இளையமகன் கமாலை அடுத்த ஜனாதிபதியாகக முயன்றதும் மக்கள் புரட்சிக்கு முக்கிய காரணம். இவ்வாறு மார்வான் தெரிவித்தார்.



எகிப்து புரட்சியில் 846 பேர் பலியானதன் பின்னணியில் முபாரக் இருப்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்பிருப்பதாக, மற்றொரு நீதிபதி ஜக்கரியா ஷலஷா தெரிவித்துள்ளார்.

# இராணுவ நிபுணர்களை அனுப்பும் பிரிட்டன் முடிவிற்கு லிபியா கண்டனம்

(திரிபோலி)

லிபியாவுக்கு இராணுவ நிபுணர்களை அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ள பிரிட்டனுக்கு, லிபியா கடும்கண்டனம் தெரிவித் துள்ளது.

அதேநேரம், போரைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, ஐ.நா., மேற்பார்வையில் இன்னும் ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தவும், கடாபியின் எதிர்காலம் குறித்தும் விவாதிக்கவும் தயார் என்று லிபிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

இதுகுறித்து லிபிய வெளியுறவு அமைச்சர் அப்துல் அடி அல் அபைடி அளித்த பேட்டியில் கூறியதாவது: இராணுவ நிபுணர்களை அனுப்பி எதிர்த் தரப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் பிரிட்டன் இறங்கியுள்ளது கண்டிக்கத்தக்கது. இதனால், லிபியாவில் அமைதி ஏற்படுவதற்குப் பதிலாக, நீண்ட காலப் பிரச்னைதான் ஏற்படும். போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுப் பேச்சு நடந்தால் தான் எதிர்த்தரப்பு கோரும் ஜனநாயகம், சுதந்திரம், அரசியல் சீர்திருத்தம், தேர்தல் ஆகியவை நடக்கும். போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பிருக்கிறது. மேலும், அதன் பின் கடாபி இதே பொறுப்பில் நீடிக்க வேண்டுமா? ஓய்வு பெற வேண்டுமா? என்பது உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதிக்க வேண்டும். இவ்வாறு அபைடி கூறினார். லிபியத் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த கடாபியின் மகன் சயிப் அல் இஸ்லாம், நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஒவ்வொரு நாளும் நிலவரம் நமக்கு சாதகமாகத் தான் மாறி வருகிறது என்று கூறினார். எனினும், மிஸ்ரட்டா நகரில் ஐ.நா. மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து மனிதாபிமான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பதாக லிபிய அரசு அறிவித்துள்ளது.

# எயிட்ஸ் நோயால் இறப்பவர்கள் சீனாவில் அதிகரிப்பதாகத் தகவல்

(பீஜிங்)

சீனாவில், எயிட்ஸ் நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி, இதுவரை அந்நாட்டில் எயிட்ஸ் நோயால் 68 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

சீனாவில், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்தம் ஏழு லட்சத்து 40 ஆயிரம் பேர். இவர்களில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் அந்நோயின் இறுதிக் கட்டத்தில் இருப்பவர்கள். சீன கம்யூனிஸ்ட் அரசு, அந்நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.




பல்வேறு கண்காணிப்புகள் இருந்தபோதிலும், எயிட்ஸால் பாதிக்கப்பட்டோர் என்பது தெரிந்தால் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகிவிடுவோமோ என்ற பயத்தால் பலர் தங்கள் உடல் நிலையை பற்றித் தெளிவாக வெளியில் சொல்வதில்லை.

மேலும், கடந்தாண்டு, எச்.ஐ.வி.யால் புதிதாகப் பாதிக்கப்பட்ட 44 ஆயிரம் பேரில், 13 சத வீதம் பேர் ஆண் ஓரினச் சேர்க்கையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவுக்கும், ஓரினச் சேர்க்கைக்கு சீனாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடநதாண்டில் மட்டும் ஏழாயிரத்து 700 பேர் எயிட்ஸிற்குப் பலியாகியுள்ளனர். கடந்தாண்டோடு இதுவரை சீனாவில் மொத்தம் 68 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். சீனாவில் 1990 களில் ஆரம்பிக்கப்பட்ட, இரத்த விற்பனைத் திட்டத்தால் தான் இந்நோய் அதிகளவில் பரவி வருவதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகத்தின் நோய்த் தடுபபு மற்றும் கட்டுப்பாட்டுக் குழுவின் துணை இயக்குநர் ஹாவோ யாங் கூறியுள்ளார்.

கடந்த 1990 முதல், சீனா வில் இரத்த விற்பனைத் திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி, ஒருவர் தனது இரத்தத்தை உரிய முகவரிடம் விற்று அதற்கேற்ப பணம் பெற்றுக்கொள்ளலாம். கூடுதலாக, ஒருவரின் இரத்தத்தில் உள்ள "பிளாஸ்மா"வை மட்டும் எடுத்துவிட்டு, மீண்டும் அதே இரத்தத்தைக் கொடுத்தவர் உடம்பிலேயே செலுத்திவிடுவர்.

இம்முறையில் பாதுகாப்பற்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டதால்தான் அதிகளவில் எயிட்ஸ் பரவியது என்கிறார் யாங்.

மேலும், நாடு முழுவதும் போலி முகவர்கள் அதிகரித்துவிட்டதால் இரத்தப் பரிமாற்றத்தில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை என்கிறார் அவர். குறிப்பாக, இந்த இரத்த விற்பனைத் திட்டத்தால், ஹெனான், 'ஷான்ஷி', ஆன்ஹுயி மற்றும் ஹுபேய் ஆகிய மாகாணங்களின் கிராமப் புறப் பகுதிகளில் உள்ள விவசாயிகள்தான் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், சீனாவில் எயிட் ஸால் பாதிக்கப்பட்டவர்களின் முழு எண்ணிக்கையும் அதிகார பூர்வமாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய எதிர்க்கட்சித் தலைவர் கைது

(டமாஸ்கஸ்)

சிரியாவில், கடந்த 63 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த அவசரநிலைச் சட்டத்தை நீக்க, வகை செய்யும் மசோதாவுக்கு, அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கிடையில், சிரிய எதிர்க்கட்சித் தலைவர், நேற்றுமுன்தினம் அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த உடனே கைது செய்யப்பட்டார். சிரியாவில், ஜனாதிபதி அசாத் உடனடியாகப் பதவி விலகக்கோரி, மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளில், 63 ஆண்டுகளாக அமுலில் இருந்து வரும் அவசரநிலைச் சட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதும் ஒன்று. நேற்று முன்தினம் கூடிய சிரிய அமைச்சரவை, அச்சட்டத்தை இரத்துச் செய்ய வழி வகுக்கும் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தது. இம்மசோதா சட்டமாவதற்கு நாடாளுமன்றில் ஒப்புதல் தேவை. மே 2 ஆம் திகதியன்று தான் நாடாளுமன்றம் கூடும்.

அதேநேரம், இச்சட்டத்திற்கு மாற்றாக, அந்நாட்டு உள்துறை அமைச்சகம் மற்றொரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது பழைய சட்டத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. எனினும், ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் தொடர இச்சட்டம் வழிவகுக்கிறது. அதேநேரம், அவசரநிலைச் சட்ட இரத்து மட்டுமே மக்களை அமைதிப்படுத்திவிடாது.

அத்துடன் பல்கலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், பொலிசாரால் தடியடிப் பிரயோகம் மூலம் கலைக்கப்பட்டதுடன், மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

## புனித வெள்ளியில் தரிசனம்




இறைமகன் இயேசுவின் சிலுவைப் பயணம் சிலுவைச்சாவைத் தரிசித்த நாளே புனித வெள்ளியாகும்.

கிறிஸ்துவின் இலட்சியப் பயணம் இறுதி வரை பல்வேறு நிலைகளில் மனித விடுதலைக்காகத் தனது உயிரைக் கொடுக்கும் இறுதிநிலை, இரு கள்வர் நடுவிலே சிலுவையில் அறையும் காட்சிகள் பல நிலைகளில் சிலுவைப் பாதைப் பயணமாக செப, தவ, தியான வழிபாடுகளாகவும் தவக்கால யாத்திரைகளாகவும் 40 நாட்கள் வரை கிறிஸ்தவர்கள் நினைவு கூர்ந்த இறுதித் தினமாக பெரிய வெள்ளி நினைவு கூரப்படுகிறது.

"எங்கே சுமந்து போகிறீர், சிலுவையை பொங்கும் பகைவராலே அங்கம் நடுநடுங்க எங்கே போகிறீர்" என இறைமகன் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் ஒவ்வொருவரும் எமது பாவ வாழ்வின் விடுதலைக்காக சிலுவைப் பயணம் எமக்கு ஞாபகமூட்டும். இறைத் தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற இறைமகன் கிறிஸ்து தனது உயிரைச் சிலுவையில் விடும் காட்சிகள், பாடுகளின் பாதையின் பரமன் மனித உருவில் மானிடர்களுக்காகத் தனது ஆவியை இறைத் தந்தையிடம் கையளிக்கிறார்.

"பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்" என்று மன்னிப்பின் மாண்பினை இறக்கும் தறுவாயில் பிறரது தவறுக்காக இறை தந்தையிடம் வேண்டும் நிலையை இத்தினங்களில் ஒவ்வொரு மனிதர்களுக்கும் சிந்திக்க மட்டுமல்ல செயலாக்கவும் அழைக்கிறார் இயேசு.

துன்புறும் மனங்களின் துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு பொழுதும் பாடுகளுக்காக துன்புறும் மனங்களில் இயேசுவின் சிலுவைப் பயணமே தரிசனமாக இன்று தோற்றம் பெறும்.

"இதோ உன்தாய்", "இதோ உன்மகன்" உலகின் தாயாக மரியன்னையை அறிமுகப்படுத்தி "எல்லாம் நிறைவேறிற்று" என தன் ஆவியை இறைத் தந்தையிடம் கையளிக்கிறார். இருள் ஆட்சி செய்தது. சாவை வென்றதாக சரித்திரம் எழுத நினைத்தோருக்கு இறைமகனின் இறுதி மூச்சு மூன்று நாட்களில் விடைதந்தது.

**ஜோசப்பாலா.**

## அவதார காலத்தில் எமது பணி




செயற்படாத தொலைநோக்கு ஒரு கனவு போன்றது. தொலைநோக்கு இல்லாத செயற்பாடு கொடுமையான கனவு. தொலைநோக்கும், அதையொட்டிய செயறபாடும் உலகை மலரச் செய்யக் கூடியவை.

எப்படி இருந்தாலும் அந்தத் தொலைநோக்கைச் செயற்படுத்துவதற்கு, தெய்வீகத்திற்கு மனிதனின் உதவி தேவைப்படுகிறது.

பெரிதாக்கிக் காட்டும் கண்ணாடியினால் குவிக்கப்படாவிட்டால் எல்லையில்லாத சக்தியுள்ள சூரிய ஒளிக்கதிர்களால் ஒரு புல்லிதழையோ, கடதாசித் துண்டையோ எரிக்க முடியாது.

அதேபோன்று கலியுகத்தில் அவதாரத்தின் அமுத மொழிகளுக்கும், அருளுரைகளுக்கும், ஊக்குவிப்புகளுக்கும் தொலைநோக்கும் மனிதர்கள் சாயி சேவை செய்பவர்கள் கருவியாக இருந்து செயற்றிட்டங்களை ஒருங்கு குவித்து நிகழ்ச்சி நிரல் ஆக்க வேண்டும். அப்படியென்றால்தான் தனிப்பட்டவர்களும், குடும்பங்களும், சமூகமும், நாடும் பயன்பெறலாம். **(பாபா)**

# தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி பூந்தமல்லி சிறையில் அதிகள் உண்ணாவிரதம்



(சென்னை)


தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் நான்கு பேர், கடந்த செவ்வாயக்கிழமை இரவு முதல், திடீரென உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் இருந்து எவ்வித ஆவணமும் இல்லாமல், சட்டவிரோதமாக, கடந்த சில ஆண்டுகளுக்கு முன், தமிழகத்திற்கு வந்த இலங்கை அகதிகள் மீதான வழக்கு நடந்து வருகிறது. வேலூர் முகாமில் இருந்த இந்த அகதிகளில் பெரும்பாலானோர், செங்கல்பட்டு சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்டனர். இவர்கள் மீதான வழக்கை, கியூப் பிரிவுப் பொலிசார், விசாரித்து வருகின்றனர். செங்கல்பட்டு அகதிகள் முகாமில், பொலிசாருக்கும், அகதிகளுக்கும் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு செங்கல்பட்டு அகதிகள் முகாமில் இருந்து ஒன்பது பேர், பூந்தமல்லியில் உள்ள தனிச் சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்டனர. பிடிபட்டு பல ஆண்டுகளாகியும், தங்கள் மீதான வழக்கு விசாரணை மந்தமாகவே நடந்து வருகிறது என்றும், வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அகதிகள் வலியுறுத்தி வந்தனர். இது தொடர்பாக, முகாமில் பலமுறை உண்ணா விரதம் உள்ளிட்ட தொடர் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். போராட்டம் நடக்கும்போது, அதிகாரிகள், அகதிகளை சமரசப்படுத்தி வந்தனர். கடந்த ஜனவரி மாதம், பொங்கல் பண்டிகையன்று, அகதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். எங்களை விடுவிப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் சொல்வதைச் செய்வதில்லை. எங்கள் மீதான வழக்கு விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும். அதுவரை பிணையில் வெளியே அனுப்பி, வழக்கை நடத்த வேண்டும் என்பது உட்பட, பல்வேறு கோரிக்கைகளை அகதிகள் முன்வைத்தனர்.

தொடர் போராட்டத்தைத் தொடர்ந்து, பரமேஸ்வரன், பிரதீபன், பகீரதன், செல்வகுமார் ஆகிய நான்கு அகதிகள், கடந்த பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியும், பத்மராஜா என்பவர் 2ஆம் திகதியும், முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர். அமுதன், இராமச்சந்திரன், குமார் உடபட நான்கு அகதிகள், தொடரந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். இதற்கு, அவர்கள் ஐந்து பேரை விடுதலை செய்ய மேலிடம் உத்தரவு பிறப்பித்தது. உங்களுக்கும் விரைவில் உத்தரவு வரும். அதுவரை அமைதியாகக் காத்திருங்கள் என, அதிகாரிகள் கூறியதால், நால்வரும் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டனர். இந்நிலையில், ஐந்து அகதிகள் விடுதலை செய்யப்பட்டு, மூன்று மாதங்களாகியும் எங்களை விடுதலை செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி, திடீரென நான்கு அகதிகளும் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்தனர். அவர்களிடம் முகாம் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவத்தால், பூந்த மல்லி தனிச் சிறப்பு முகாமில் பரபரப்பு ஏற்பட்டது.

# பணக்காரர்கள், ஏழைகள் என இரண்டு இந்தியா இருக்க முடியாது

## உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு



(புதுடில்லி)

நாடு முழுவதும நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த பொது விநியோகத் திட்டத்தில் பெரிய அளவில் ஊழலும் முறைகேடும் நடைபெறுவதாக மக்கள் உரிமைக்கான சங்கம் சார்பில் உயர் நீதிமன்றில் பொது நல வழக்குத் தொடரப்பட்டது.

நீதிபதிகள் தல்வீர் பண்டாரி, தீபக்வர்மா ஆகியோரைக் கொண்ட சபை முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கில் மத்திய அரசு சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மோகன் பராசரன், பொது விநியோக திட்டத்தை சீரமைப்பதற்காக அரசு மேற்கொண்ட முயற்சியால் ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினை பெருமளவில் குறைந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள் நாட்டில் பெருகிவரும் பட்டினிச்சாவு குறித்து தங்கள் ஆழ்ந்த கவலையை வெளியிட்டனர். பணக்காரர்களுக்கு ஒன்று ஏழைகளுக்கு ஒன்று என இரண்டு இந்தியா இருக்க முடியாது என்றும் அப்போது அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# பொலிஸாரைக் கொன்ற வழக்கிலிருந்து வீரப்பன் மனைவிக்கு விடுதலை கிடைத்தது

(சென்னை)

6 பொலிசாரைச் சுட்டுக் கொனறுவிட்டுத் துப்பாக்கிகளை கொள்ளையடித்த வழக்கில் இருந்து வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியை விடுதலை செய்து சாம்ராஜ் நகர் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளிதது உள்ளது.

1993ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அப்போதைய சாம்ராஜ்நகர் மாவட்ட பொலிஸ் அதிகாரியாக இருந்த கோபால் பி.ஹொசூர் தலைமையிலான பொலிசார் ஒரு ஜீப்பில் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு மாதேஸ்வரன் மலையில் இருந்து கொள்ளேகால் நோக்கி சென்று கொண்டு இருந்தனர்.

இதுபற்றித் தகவல் அறிந்த சந்தனமரக் கடத்தல் வீரப்பன் தனது கூட்டாளிகளுடன் கொளளேகால் தாலுகா மாதேஸ்வரன் மலையின் மீது காத்து நின்றான்.

அப்போது மாதேஸ்வரன் மலை அருகே உள்ள ரங்கசாமி ஒட்டு என்ற இடத்தில் பொலிஸ் ஜீப் வந்த போது வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகள் மலையில் மறைந்து நின்று கொண்டு கீழே வந்து கொண்டு இருந்த பொலிஸ் ஜீப் மீது சரமாரியாகச் சுட்டனர்.

இந்த திடீர் தாக்குதலில் ஜீப்பில் வந்த பொலிஸாரான உத்தப்பா, மாஞ்சய்யா, உவ்யா, பிரபாகர், சுவாமி மற்றும் ஜீப் சாரதி நரசப்பா ஆகிய 6 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். பொலிஸ் அதிகாரி கோபால் பி.ஹொசூர் படுகாயத்துடன் உயிர்தப்பினார்.

பின்னர் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் பொலிஸ் ஜீப்பில் இருந்த துப்பாக்கிகளை கொள்ளையடித்துக் கொண்டு காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாதேஸ்வரன் பொலிசார் வழக்குப் பதிவு செய்தனர். மேலும் இந்தச் சம்பவத்தின் போது வீரபபனுடன் அவனது மனைவி முத்துலட்சுமி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாப்பாத்தி ஆகியோரும் உடன் இருந்ததாகக் கூறி அவர்களும் வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை சாம்ராஜ்நகர் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கில் நீதிபதி ஏ.சி.வித்யாதர் தீர்ப்பளித்தார்.

அதில், முத்துலட்சுமி மற்றும் பாப்பாத்தி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே இந்த வழக்கில் இருந்து முத்துலட்சுமி, பாப்பாத்தி 2 பேரையும் விடுதலை செய்கிறேன் என்று கூறி இருந்தார்.

ஏற்கனவே பாலாறு குண்டு வெடிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முத்துலட்சுமி உட்பட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் முத்துலட்சுமிக்கும், பாப்பாத்திக்கும் இந்த வழக்கில் தொடர்பு இருப்பதால் விடுதலை செய்யப்படாமல் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தற்போது இந்த வழக்கிலும் முத்துலட்சுமி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எழுத்தாளர் அருந்ததிராய் மீதான தேசத்துரோக வழக்கு ஒத்திவைப்பு



(புதுடில்லி)

எழுத்தாளர் அருந்ததி ராய் உள்ளிட்டோர் மீது தொடரப்பட்ட தேசத்துரோக வழக்கை பாட்டியாலா நீதிமன்றம் ஜூலை 4 இற்கு ஒத்திவைத்தது.

டில்லியில் கடந்த ஆண்டு நவம்பர் 21இல் நடைபெற்ற காஷ்மீர் பிரச்சினை தொடர்பான விவாத மேடையில் பேசிய எழுத்தாளர் அருந்ததி ராய், காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர் சையது அலிஷா கிலானி, கவிஞர் வரவர ராவ் உள்ளிட்டோர் நாட்டின் இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

காஷ்மீர் தனி நாடு என்பதாக அவர்கள் பேசிய கருத்துகள் ஊடகங்களில் வெளிவந்ததைத் தொடர்ந்து சுஷில் பண்டிட் என்பவர் டில்லிப் பொலிஸில் புகார் செய்தார். இதைத்தொடர்ந்து அருந்ததிராய் உள்ளிட்டோருக்கு எதிராக டில்லிப் பொலிஸார் தேசத்துரோக வழக்குப் பதிவு செய்தனர்.

ஆனால், அதன்பின்னர் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதை எதிர்த்து டில்லியில் உள்ள பாட்டியாலா நீதிமன்றத்தில் சுஷில் பண்டிட் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தபோது, திலக் மார்க் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, மனுதாரரின் புகாரைப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருவதாக விளக்கமளித்தார்.

இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நீதிமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, அடுத்த விசாரணையை ஜூலை 4 இற்கு ஒத்திவைத்தார்.

# நித்தியானந்தா மீதான பிணைமனுவை இரத்துச் செய்யுமாறு பொலிஸார் மனு



(பெங்களூர்)

கர்நாடக மாநிலம் பெங்களூரை அடுத்த பிடதியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வருபவர் சாமியார் நித்தியானந்தா. இவர் நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருக்கும் காட்சிகள் தனியார் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து அவர் திடீரெனத் தலைமறைவானர். அவர் மீது ஆசிரம பெண் ஒருவர் அளித்த பாலியல் வல்லுறவுப் புகாரின் கீழ் பெங்களூர் பொலிசார் அவரை இமாசல பிரதேசத்தில் உள்ள சோலன் பகுதிக்கு சென்று கடந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி கைது செய்தனர்.

அவருடன் கூட்டாளி பரவானந்தாவும் பிடிபட்டார். இந்நிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி நித்தியானந்தா நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் நித்தியானந்தா கடந்த சில மாதங்களாக பொலிஸாருக்கு எதிராகப் பத்திரிகை, தொலைக்காட்சிகளில் பேட்டி அளித்து வருகிறார். அப்போது பொலிஸ் மீது கடுமையான குற்றசசாட்டுக்களை கூறினார். இதனால் ஆவேசம் அடைந்த கர்நாடகப் பொலிசார் நித்தியானந்தா பிணையை இரத்துச் செய்யகோரி மனுத தாக்கல் செய்தனர். அதில் சாமியார் நித்தியானந்தா தவறு செய்ததற்கு ஏராளமான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. அவரது பிணையை உடனே இரத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இம்மனு அடுத்த வாரம் விசாரணைக்கு வருகிறது. விசாரணையின் போது நித்தியானந்தாவுக்கு எதிரான பல்வேறு ஆதாரங்களை சி.ஐ.டி. பொலிஸார் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

இதனால் நித்தியானந்தா விவகாரம் மேலும் சூடு பிடிக்கும் என்று கர்நாடகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# குவைத்திலுள்ள இலங்கையர்களில் 5000 பேர் நாடுதிரும்ப விண்ணப்பம்

(கொழும்பு)

குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள சுமார் ஐயாயிரம் இலங்கையர்கள் அவசர வெளியேற்ற அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

குவைத் அரசாங்கம் அறிவித்துள்ள பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி அந்த நாட்டில் தங்கியிருந்த ஆயிரத்து 600 இலங்கையர்கள் ஏற்கனவே நாடுதிரும்பியதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆயிரத்து 700 பேர் சட்டபூர்வமாக விசாக்களைப் பெற்றுள்ளதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

குவைத் அதிகாரிகளின் புள்ளிவிபரங்களுக்கு அமைய அந்த நாட்டில் சுமார் 14ஆயிரம் இலங்கையர்கள் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலில் உள்ள பொது மன்னிப்புக் காலம் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதியுடன் நிறைவுபெறவுள்ளது.

குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்கள் பொது மன்னிப்புக் காலத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் எவ்வித அபராதமோ தண்டனையோ இன்றி இலங்கைக்குத் திரும்புவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# குவைத்தில் தங்கம் திருடிய இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கைப் பெண் ஒருவர் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குவைத்திலுள்ள ஹவாலி அபி விருத்திச் சந்தையில் வைத்து குறித்த பெண் தங்க ஆபரணக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இலங்கைப் பெண் கொள்ளையில் ஈடுபட்டதை சந்தைத் தொகுதியில் பொறிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கமராக்கள் பதிவு செய்ததை அடுத்து சந்தைத் தொகுதி உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சந்தை உரிமையாளரிடம் தங்க ஆபரணங்களைக் காட்டுமாறு கூறிவிட்டு அதில் ஒரு ஆபரணத்தை எடுத்து குறித்த இலங்கைப் பெண் தனது உடலுக்குள் மறைத்துள்ள காட்சியை பாதுகாப்பு கமரா படம்பிடித்துள்ளது.

இதனை அடுத்து குறித்த இலங்கைப் பெண் கைது செய்யப்பட்டதுடன், பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் அவர் 12 கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதென குவைத் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# புலிகளுக்கு எரிபொருள் வழங்கிய டிப்போ முகாமையாளர் கைது

(கொழும்பு)

யுத்த காலத்தில் புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்த குற்றச்சாட்டில் மன்னார் பஸ் டிப்போ முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்பே முஸ்லிம் நபரான மேற்படி பஸ் டிப்போ முகாமையாளர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுத்த காலத்தில் மன்னார் பஸ் டிப்போவுக்கு விநியோகிக்கப்பட்ட எரிபொருளை அவர் இரகசியமான முறையில் புலிகள் அமைப்பிற்கு வழங்கி வந்தமைக்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாக இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இரகசியப் பொலிசாரால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர் நீதிமன்ற அனுமதியுடன் விசேடபுலன் விசாரணைகளுக்கென கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

# இலங்கையில் மக்களை மீட்கும் வகையிலான மனிதாபிமான நடவடிக்கையே இடம்பெற்றது

## போர் அல்ல என்கிறார் அமைச்சர் சுசில்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றது மக்களை புலிகளிடமிருந்து மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையே தவிர, போர் அல்லவென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**



நாட்டில் போர் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில் அரசாங்கப் படையினர் மனிதாபிமான மீட்புப் பணிகளிலேயே ஈடுபட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான மோதல்களின் போது எதிரிகளுக்கும் அரசாங்கம் உணவு, பானங்களை வழங்கியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர் குழு உண்மைத் தகவல்களின் அடிப்படையில் அறிக்கையை தயாரிக்கத் தவறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக நிபுணர் குழு போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஆதரவாளர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒருதலைப்பட்சமாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தனியார் துறையினர் எதிர்ப்பு

(கொழும்பு)

தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசாங்கத்தினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு தனியார்துறை ஊழியர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இந்தச் சட்டமூலத்தின் மூலம் அசௌகரியம் ஏற்படுவதாக சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் செயலாளர் என்டன் மார்கஸ் தெரிவித்துள்ளார்.

தனியார் துறை ஊழியர்கள் தற்போது பெற்றுக் கொள்ளும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன இந்த சட்டமூலத்தினை அமுல்படுத்துவதன் மூலம் இல்லாது போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால், எதிர்வரும் 27ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றில் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கத்திற்கு முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகேயுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

தொழிற்சங்கங்களுடன் உள்ள பிரச்சினைகளினாலேயே இந்தச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

# விற்பனை செய்யமுடியாமல் விலைவீழ்ச்சி 50 தொன்மரக்கறிகள் குப்பைத் தொட்டிக்குள்



(கொழும்பு)

முள்ளங்கி, புடலங்காய், வெண்டிக்காய், பசளிக் கீரை உட்பட காய்கறி வகைகளின் விலை விற்பனை செய்ய முடியாதளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதால் கொழும்பு மெனிங் சந்தையில் சுமார் 50 தொன் மரக்கறி வகைகள் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டன. பீர்க்கங்காய், பூசனிக்காய் (வட்டக்காய்) சலாது இலை, வெள்ளரிக்காய் போன்ற காய்கறிகளின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் பாவனையாளர்கள் எவரும் இவற்றைக் கொள்முதல் செய்ய முன்வரவில்லை.

இதனால் நேற்று சுமார் 40 முதல் 50தொன் வரையிலான காய்கறி வகைகள் வீசப்பட்டன.மெனிங் சந்தையில் நேற்றைய நிலவரப்படி லீக்ஸ் கிலோ ஒன்று 25 ரூபா முதல் 30 ரூபா வரையிலும், கறி மிளகாய் 60ரூபாவாகவும், போஞ்சி 30 முதல் 40 ரூபா வரையிலும் குறைந்துள்ளது. தினமொன்றுக்கு மெனிங் சந்தைக்கு சுமார் 75 லொறிகள் காய்கறி வகைகளுடன் வருகின்றன. சுமார் 10.000தொன் வரையிலான காய்கறி வகைகள் கொண்டு வரப்படுகின்றன.

காய்கறி வகைகளின் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் கொள்முதல் செய்யும் வீதமும் வெகுவாகக் குறைந்தமையே விலை வீழ்ச்சிக்குக் காரணம் என மெனிங் சந்தை வியாபாரிகள் சங்கத்தின் பிரதான அமைப்பாளர் சந்தரதன தெரிவித்தார்.விற்பனை செய்ய முடியாதளவு காய்கறி வகைகளின் விலை வீழ்ச்சியடைந்ததும் சுமார் 50 தொன் காய்கறிகள் வீசும் நிலை ஏற்பட்டமை இதுவே முதல் தடவை எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மீதான படுகொலை முயற்சி 04 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் ஐந்து சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த சுதந்திர தினக்கொண்டாட்டத்தை ஒட்டியதாக மொனராகலையில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் படுகொலை செய்ய முயற்சி மேற்கொண்டதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மொத்தம் ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்த போதும் மருத்துவர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர் சட்டமா அதிபரின் சிபாரிசின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி ஒருவர் உள்ளிட்ட நான்கு பேரே தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிர்வரும் 04ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை நிபந்தனையுடன் ஏற்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கையை நிராகரிப்பது புலிகளின் போர் குற்றங்களை மறைக்கத் துணை செய்வதற்கு ஒப்பானதாகிவிடும். எனவே ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கையை முற்று முழுதாக நிராகரித்து விடாமல் அதனை நிபந்தனையுடன் ஏற்றுக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மகாநாடொன்றின் போது ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான நிபுணர்குழு அறிக்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு புலிகள் பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளது.

அந்தவகையில், பிரஸ்தாப நிபுணர் குழு அறிக்கையை முழுமையாக நிராகரிப்பதானது புலிகளை நிரபராதிகள் என்று ஒப்புக் கொள்வதற்குச் சமனாகும். அதன் காரணமாக நிபந்தனைகளும் பிரஸ்தாப அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் ஐ.தே.க.வினால் அறிக்கை வெளியிடப்படுவதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சாடுகின்றார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்தே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஜனநாயகத்தை வலுப்படுத்தல், மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்தல், தமிழ் மக்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வை வழங்குதல் ஆகியன போன்ற சில செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வதன் மூலம் சர்வதேச மட்டத்திலான அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பதாக ஐக்கிய தேசியக்கட்சி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

# நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

மரணமடைந்த ஊடகவியலாளர் ரஜிவர்மனின் குடும்பத்துக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நிதியுதவி வழங்கியுள்ளது. கொழும்பிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை சென்ற இந்த ஒன்றியத்தின் பிரதிநிதிகள் புத்தூரில் உள்ள ரஜிவர்மனின் இல்லத்துக்கு சென்று 20 ஆயிரம் ரூபாவை ரஜிவர்மனின் தாயாரிடம் கையளித்தனர்.

கொழும்பிலுள்ள விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இந்த நிதியுதவியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் பாரதி இராஜநாயகம், உப தலைவர் அ.நிக்ஸன், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தம் மற்றும் யாழ். ஊடகவியலாளர்களான திருச்செல்வம், ரட்ணம் தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் தாங்கிகள் பாகிஸ்தானிடமிருந்து



(கொழும்பு)

நாடுமுழுவதும் எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்காக புதிய எரிபொருள் தாங்கிகளை இறக்குமதி செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.


இதன் பிரகாரம் 224 மில்லியன் ரூபா நிதி செலவில் 24 எரிபொருள் தாங்கிகளை பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜயசமரசிங்க குறிப்பிட்டார்.

ரயில்வே துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகயில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் 2011 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இந்த எரிபொருள் தாங்கிகள் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள எரிபொருள் தாங்கிகளைச் சேவையில் இணைத்துக் கொள்வதன் மூலம் ஒட்டு மொத்த எரிபொருள் விநியோகத்தை 70 வீதமாக உயர்த்திக் கொள்ள முடியும் என்று விஜயசமரசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். ரயில் மூலமான எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிப்பதன் ஊடாக இந்தச் சேவையை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றமடையச் செய்ய முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# பலமடைகிறது சிவில் நிர்வாகம் தொடரும் பொலிஸ் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)



வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களின் இளைஞர் யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று நடைபெற்றுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நேற் றையதினம் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின் றது. நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய தமிழ் இளைஞர் - யுவதிகளில் தகுதியுடையோர் பொலிஸ் சேவையில் உள்வாங்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், சட்டம் மற்றும் ஒழுங்குகளைப் பேணுவதற்காகவும் தமிழ் இளைஞர்கள் விரைவில் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதனையடுத்து, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் தனித்தனியே பொலிஸ் சேவைக்கான நேர் முகப்பரீட்சைகள் நடத்தப்படவுளளதாக பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டுகின்றது.

## கூட்டுறவு அமைப்புகள்...

கொத்தணிகள், சமாசம் போன்ற வற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் 100 வீதம் முழுமையான வரியினைச் செலுத்திவரும் பெருமை பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களையே சாரும்.

இதற்காக நான் உங்களை நன்றியுடன் பாராட்டுகின்றேன். வறிய குடும்பங்கள் தங்கியிருக்கின்ற ஓர் வாழ்வாதார நிறுவனமான தங்களின் இக்கூட்டுறவு நிறுவனங்கள் இவ்வரிச்சலுகையினை பயன்படுத்தி முன்னேற்றமான பாதையில் பயணிக்க வேண்டும் என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்த வரி நீக்கத்தினால் பெறப்படும் வருமானத்தினை இந்த பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வடமாகாணத்தின் மூலவள மான பனை வளப் பாதுகாப்புக்கு பயன்படுத்துவதன் ஊடாக எம் எதிர்காலச் சந்ததிக்குப் பொருளாதார ஸ்திரத்தன்மையினைப் பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி வரி நீக்கத்தினால் ஏற்பட்டுள்ள வர்த்தக வாய்ப்புகளை யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனேகமான கூட்டுறவு அமைப்புக்கள் முறையாகப் பயன்படுத்திக்கொள்ளுமாயின் அவற்றின் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் இலாபகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(27)

## கள யதார்த்தம்...

என்பதை உணரக் கூடிய மாதிரி இருக்கும் என்றார்.

தற்போது வெளியாகியிருக்கும் இந்த அறிக்கையின் உண்மைத் தன்மை பற்றி அரசு சந்தேகம் இருக்கலாம்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் அறிக்கை வரும்முன் அல்லது இந்த ஆணைக்குழுவின் முன்வந்து சாட்சியங்கள் பதிவு செய்யப்படாமல் இவ்வாறான அறிக்கைகள் வருவது அரசாங்கத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் இது ஒரு இறைமையுள்ள நாடு. இந்த நாட்டில் வேறு எந்த நாடுகளும் தன்னிச்சையாகத் தலையிட முடியாது. ஒரு புரிந்துணர்வோடு, இணக்கப்பாட்டோடு தான் எந்தச் செயற்பாடுகளும் அமைய வேண்டும் என்றார்.

அத்துடன், கடந்த காலங்களில் தமிழ்சமூகத்திற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் கிடைத்தது அந்தச் சந்தர்ப்பங்களை எல்லாம் தமிழ்த் தலைமைகள் சரியான முறையில் பயன்படுத்தாதது மட்டுமன்றி அதனைத் துஷ்பிரயோகமும் செய்துவிட்டனர்.

இப்போதும் நல்ல சந்தர்ப்பங்கள் வருகிறது. இந்தச் சந்தர்ப்பங்களையும் சரியான முறையில் தமிழ்த் தலைமைகள் மக்களின் நன்மைக்காககப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## அதிகரித்து வரும்...

நாட்டின் வெளிநாட்டு முதலீடு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தற்போது இயல்பான சூழ்நிலைக்குத் திரும்பியுள்ள நிலையிலும், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையிலும் தற்போது 7.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மணிக்கூட்டுக் கோபுர வீதி பால திருத்த வேலைகள் பூர்த்தி

(கொக்குவில்)

யாழ். மணிக்கூட்டுக்கோபுரச் சுற்றுவட்டத்தில் பழுதடைந்த பாலம் திருத்த வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக மேற்படி பாலத்தின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுவந்தது.

இதனால் அவ் வீதியைப் பயன்படுத்தும் யாழ். கண்டி வீதியூடான போக்கு வரவுகள் வெவ்வேறு வீதிகள் மார்க்கமாக நடைபெற்று வந்தன.

கச்சேரி, யாழ்ப்பாணம், கொடிகாமம், கொழும்புத்துறை போன்ற உள்ளூர் பஸ் சேவைகளும் இவ்வீதியையே பயன்படுத்தி வந்தன.

இதனால் யாழ். நீதிமன்றம், பொதுநூலகம், யாழ். மத்திய கல்லூரி, சுப்பிரமணியம் பூங்கா போன்ற இடங்களுக்குச் செல்பவர்களின் போக்குவரவில் அசௌகரியம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (68)

## வடக்கு-கிழக்கில்...

குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள தொழிற்

பயிற்சி நிலையங்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக் கப்பட வுள்ளன.

இதற்கிணங்க குறித்த தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், கணினி அறைகள் மற்றும் வாகன வசதிகள் போன்ற பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 325 மில்லியன் ரூபா வந்தாறுமூலை மற்றும் ஒந்தாச்சிமடம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கப்படவுள்ளன.

# வத்தளையில் ஆணின் சடலம்

(கொழும்பு)

வத்தளை - ஹெமில்டன் ஓடைக்கு அருகில் இருந்து வெட்டுக் காயங்களுடன் ஆணின் சடலமொன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. இரண்டு கைகளும் வெட்டி அகற்றப்பட்ட நிலையில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# போர்த்துக்கல் எதிர்க்கிறது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான அறிக்கை, பாதுகாப்பு சபைக்கு அனுப்பப்பட்டமை தொடர்பில், போர்த்துக்கல் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. இந்த நிலையில் போர்த்துக்கலும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த அறிக்கை குறித்து அண்டைய நாடான இந்தியா, இதுவரையில் எந்த நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

# வடபகுதி வளங்களைச் சுரண்டும் தென்பகுதி தனியார் நிறுவனங்கள்

## யாழ்.மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் கே.அருந்தவநாதன்

தென்பகுதி நிறுவனங்கள் வடபகுதி நிறுவனங்களின் மூல வளங்களைச் சுரண்டுகின்றன. இன் நிலை தொடரின் யாழ்.மாவட்டத்தின் கூட்டுறவு நிறுவனங்கள் திறந்தபோட்டிப் பொருளாதாரச் சந்தைக்கு முகம் கொடுக்கமுடியாமல் அழிவடைந்துபோகும் நிலை ஏற்படும். இவ்வாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நேற்று (21.04.2011) இடம் பெற்ற பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் சமாசம் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுடனான மாதாந்த அபிவிருத்திக் கலந்துரையாடலின்போதே தெரிவித்தார்.

மேலும் பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நிலையான வைப்புக்களை ஆணையாளரின் அனுமதியின்றி மீள எடுக்க முடியாது எனவும், அவ்வாறு செயற்படும் சங்கங்கள், நிர்வாகசபையினர் மீது கூட்டுறவு சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் தென் பகுதி நிறுவனங்கள் யாழ்.மாவட்டத்தில் காலூன்றி கூட்டுறவு நிறுவனங்களுடன் போட்டிபோட்டுச் செயற்பட்டு கூட்டுறவு அமைப்களை மறைமுகமாக வீழ்த்தும் செயற்பாட்டில் இறங்கியுள்ளன. இந்நிலையில் கூட்டுறவு அமைப்புக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் யாழ். மாவட்டம் தோறும் 20இற்கு மேற்பட்ட "யாழ்கோ" பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் விற்பனை நடைபெற்றபோதும், தற்போது தென்பகுதி நிறுவனம் ஒன்று யாழ்.மாவட்டத்தில் மேற்படி செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதுடன் அதிக விலையில் பாலினைக் கொள்வனவு செய்து மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களைத் தன்பால் ஈர்த்துக்கொண்டிருப்பதானது எமது கூட்டுறவு அமைப்பின் செயற்பாட்டுக்கு மிகப் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இவ்வாறான போட்டிச் சூழலில் அச்சூழலுக்கு ஏற்ற மாதிரி கூட்டுறவு அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை விருத்தியடையச் செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டார். (27)

# நாடு கடந்த அரசுடன் பேச்சு கூட்டமைப்பின் ஆபத்தான போக்கு

## இது கருணாவின் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்திக்கவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த 18 ஆம் திகதி சிங்கப்பூர் சென்றதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர் புலிகளின் ஆதரவாளர்களைச்சந்தித்துள்ளமை குறித்து தன்னிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காக சிங்கப்பூர் செல்வதற்குத் தேவையில்லை எனவும், இவர்கள் தனி ஈழத்தை அமைப்பதற்காக உதவிகளை, அனுசரனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துக் கொண்டுள்ளதாகவும் முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அரசாங்கத்திற்கும், கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் நிலையில், வெளிநாடு ஒன்றில் இவ்வாறான பேச்சுவார்த்தையில் கலந்துக்கொண்டமையானது ஆபத்தான நிலைமையை தெளிவுப்படுத்துவதாக பிரதிமைச்சர் முரளிதரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இந்தியா மௌனம் காப்பது ஏன்?

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேள்விக்கணை



(புதுடில்லி)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் இந்தியா அமைதி காப்பது ஏன்? என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; இலங்கையில் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த அறிக்கை அனைத்துப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியாகி உள்ளது. இவ்வாறு வெளியாகியும் அது பற்றி இந்தியா இன்னும் எந்தவித கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் கடைப்பிடிக்கிறது. இறுதிக் கட்டப் போரில் இலங்கையுடன் இந்தியா இணைந்து செயல்பட்டதே இதற்குக் காரணமாகும்.

இலங்கைக்கு ஆயுத பலம், பண பலத்தை அளித்தது இந்தியா. அதன் மூலம் இலங்கை அரசு அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்து போரில் வெற்றி பெற்றது. இதனால், இந்தியா இப்போது சர்வதேச அரங்கில் குற்றவாளி கூண்டில் நிற்கிறது. ஐ.நா. சபைக்குழு அறிக்கை மீது இந்தியா இது வரை கருத்துத் தெரிவிக்காதது ஏன்? புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவிய இந்தியா, இப்போது தனது நிலையை வெளிப்படுத்தாதது ஏன்? இலங்கையில் 30 ஆண்டுகளாக நடந்த இந்த உள்நாட்டுப் போரில் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் ஆதரவில்லாமல் வெற்றி பெற்றிருக்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொண்டிருந்தார். இலங்கை போர்க்குற்றம் புரிந்துள்ளது என்ற அறிக்கைக்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தனது நிலையைத் தெரிவிக்க வேண்டும். புலிகளுக்கு எதிரான போரில் இந்தியா ஆதரவு அளிக்கிறது என்று வெளியான செய்தியை இந்தியா எந்த சமயத்திலும் மறுத்தது இல்லை. தமிழர்களுக்கு எதிரான இந்த போரில் இந்தியா முக்கிய பங்கு வகித்தது.

இலங்கையில் இவ்வளவு அதிக அளவில் பொதுமக்கள் இறப்பதற்கு இலங்கை அரசும், புலிகளுமே காரணம் என்றும், அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனவும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினசரி ஒருவர் எயிட்ஸ் பிடியில்



(கொழும்பு)

இலங்கையில், தினமும் குறைந்தபட்சம் ஒருவராவது எயிட்ஸ் நோய் உள்ளவரென நோய் நிர்ணயம் செய்யப்படுகின்றார். இலங்கையில் 300 இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இதுவரையில் 1250 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் மைத் திரிபால சிறிசேன கூறினார்.

நாட்டில் எச்.ஐ.வி. பரவல் வீதம் குறைவாகவே காணப்படுகிறது. எனினும் நாம் வினைத்திறனான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமைச்சர் கூறினார்.

எச்.ஐ.வி., எயிட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களில் 61 சதவீத மானவர்கள் மேல் மாகாணத்தில் உள்ளதாக அமைச்சர் கூறினார். பெண் பாலியல் தொழிலாளர்கள், ஒரு பாலின சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், ஹெரோயின் பாவனையாளர்கள், கடற்கரைச் சிறுவர்கள், சிறைக் கைதிகள் ஆகியோரே அதிக பாதிப்புக்குள்ளாகுவதாக தேசிய பால்வினை எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் நிமல் எதிரிசிங்க கூறினார்.

40,000 பாலியல் தொழிலாளர்கள், 35,000 ஒரு பாலின சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், 40000 ஹெரோயின் பாவனையாளர்கள் உள்ளனர். மேற்படி ஹெரோயின் பாவைனயாளர்களில் ஒரு சதவீதமானோர் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றனர். இவர்களுக்கு படிப்பினையூட்டி, எச்.ஐ.வி. சிகிச்சை அளித்தால் இந்நோய் பரவாமல் தடுக்கலாம் என டாக்டர் எதிரிசிங்க மேலும் கூறினார்.

## ஏற்றுக்கொள்ள முடியாத...

தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா.வின் நிபுணர் குழுவானது அதன் முறையான அங்கமொன்றல்ல. அக்குழு தனக்கு வழங்கிய ஆணையை மீறிச் சென்றுள்ளது எனவும், நல்லிணக்கத்திற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்..

நிபுணர் குழுவின் இந்த அறிக்கையை வெளியிடுவது அடிப்படைத் தவறாகும். நாம் ஐ.நா.வுக்கு என்ன கூறுகிறோம் என்றால், எம்மை இணைந்து செயற்பட விடுங்கள் என்பதே. இலங்கை அதன் இருண்ட காலங்களிலிருந்து விடுபட்டு வெளிவரும்போது அதற்கு ஐ.நா. உதவ வேண்டும். குறித்த அறிக்கை வெளியிடப்படும் பட்சத்தில் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்து இன மக்களையும் ஒன்றினைக்க முடியாது. இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சவாலாக அமையும். அதனால், அவ்வறிக்கை நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே அமைய வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக் கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் ஐ.நா.வின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டமை தவறாகும். நல்லிணக்க ஆணைக்குழு நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களையும் பதிவுசெய்து வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டமை தவறானதாகும்.

நியூயோர்க்கிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி இந்த அறிக்கை அனுப்பப்பட்டது. அறிக்கை அனுப்பப்படும் போது அந்நாட்டு நேரப்படி பகல் 12.15 மணியாகவிருந்தது. அறிக்கையைப் பார்த்தவுடன் இலங்கை அரசு அதனை நிராகரிப்பதாக உடனே அறிவித்தது.

இதேவேளை, குறித்த அறிக்கையினை கசியவிடும் நடவடிக்கையிலும் இலங்கை அரசாங்கம் ஈடுபடவில்லை. குறித்த அறிக்கையின் முன்மொழிவுகளைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளும் இல்லாமல் செய்யப்படும்.

200 பக்கங்கள் கொண்ட அறிக்கைக்கு ஏழு நாள் மற்றும் ஏழு மணித்தியாலத்திற்குள் பதிலளிக்க முடியாது. அத்துடன் இந்த நிபுணர் குழுவின் அறிக்கை மேற்கத்தேய ஆலோசனைகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டதாகும். குறித்த நிபுணர் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்க அவரால் நியமிக்கப்பட்டதே தவிர ஐ.நாவின் எந்தவொரு சபையினாலும் நியமிக்கப்படவில்லை. இலங்கையின் நீதிமன்ற முறைமை, சட்ட மா அதிபர் திணைக்களம், மக்களால் தெரிவுசெய்யப்பட்டோர் தொடர்பில் வெளிநாடுகளுக்கு கருத்து தெரிவிக்க முடியாது. இலங்கையிலுள்ள பிரச்சினைக்கு முடிவு காண வெளிநாடுகள் நேர அவகாசம் வழங்க வேண்டும். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிப்பதற்காக எந்தவொரு குழுவையும் இலங்கை அரசு நியமிக்கவில்லை. நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் என்னால் கருத்து தெரிவிக்க முடியாது. குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது பிழை என்று கூறும் போது அது தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்கள் மற்றும் முன்மொழிவுகள் எதனையும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. குறித்த நிபுணர் குழு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கும் ஒரு குழுவே தவிர அது ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவல்ல. நிபுணர் குழு புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபடவில்லை. குற்றமிழைத்தவர்களை விசாரிக்கவுமில்லை. குறித்த துறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டது என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**கீழ் வரும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**



சின்னக் குருவி பறக்கிறது
சிறகை காற்றில் உதைக்கிறது
திண்ணை மீது அமர்கிறது
திரும்பித் திரும்பிச் சிரிக்கிறது

வெய்யில் நன்கு காய்கின்றது
வெளியில் நெல்லும் காய்கின்றது
மெல்லக் குருவியும் வருகின்றது
மெதுவாக நெல்லையும் கொத்துகிறது

பஞ்சம் வந்திடாதே என்று நானும்
பத்து நெல்லை அள்ளிப் போட்டேன்
சிறிய தன் அலகினால் தின்கிறது
சிறகைக் காற்றில் உதைத்துப் பறக்கிறது



1. நான் எங்கே அமர்திருந்தேன்?
   ..........................................................................................
2. பறவைகள் காற்றில் பறக்க அவற்றிக்கு உதவுவது எது?
   ..........................................................................................
3. இங்கே கூறப்பட்டுள்ள தானிய வகை என்ன?
   ..........................................................................................
4. அலகு எனும் சொல்லின் ஒத்த சொல்லைத் தருக.
   ..........................................................................................
5. நெல்லில் இருந்து மனிதர்கள் பெறும் முக்கியமான பொருள் எது?
   ..........................................................................................
6. வருகின்றது என்பது என்ன காலம்?
   ..........................................................................................
7. இக்கவிதையில் வந்துள்ள எண்ணின் இரு ம்டங்கு எத்தனை?
   ..........................................................................................
8. உணவு கிடைக்காத காலத்தில் என்ன வந்து விட்டதாகக் கூறுவார்கள்?
   ..........................................................................................
9. குருவி நெல்லைக் கொத்துவது போல் மாடு புல்லை என்ன செய்யும்?
   ..........................................................................................
10. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொற்களை எழுதுக.
    1. சிரிக்கிறது :.............................................. 2. சிறிய :..............................................





## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 10



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்**

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1. | 3 | 21. | 1 |
| 2. | 1 | 22. | 3 |
| 3. | 2 | 23. | 2 |
| 4. | 1 | 24. | 3 |
| 5. | 2 | 25. | 2 |
| 6. | 2 | 26. | 3 |
| 7. | 1 | 27. | 3 |
| 8. | 3 | 28. | 1 |
| 9. | 1 | 29. | 1 |
| 10. | 1 | 30. | 2 |
| 11. | 3 | 31. | 2 |
| 12. | 3 | 32. | 1 |
| 13. | 3 | 33. | 2 |
| 14. | 3 | 34. | 1 |
| 15. | 2 | 35. | 3 |
| 16. | 3 | 36. | 2 |
| 17. | 3 | 37. | 3 |
| 18. | 2 | 38. | 2 |
| 19. | 1 | 39. | 2 |
| 20. | 3 | 40. | 1 |

## பகுதி -II

**01.** 1. கோடை காலத்துக்குரியது/வரண்டகாலம்
2. தங்கம் 3. ஒட்டகம்
4. 1. வாளி 2. ஆறு
5. வியர்வை
6. 1.சூரியன் 2. வானம் 3. உடம்பு 4. நெருப்பு
7. முகில் தங்க நிறமாகக் காட்சி தருகிறது.
8. நிகழ்காலம்

**02.** 1. மகாத்மா காந்தி அகிம்சை வழியில் வெள்ளையருக்கு எதிராகப் போராடிய மாமனிதர் ஆவார்.
2. அதிகாலையில் கிழக்கு அடிவானம் செக்கச் செவேல் என சிவந்திருந்தது.

**03.** 1. மிகவும் சிறப்பான 2. ஆதரவின்றி கைவிடல்

**04.** 1. விளக்கினை 2. பயிற்சி

**05.** 1. கமம்/கழனி 2. மந்தை/பட்டி 3. ஏர்
4. அறுவடை 5. வைக்கோற்போர்

**06.** 1. பிழை 2. பிழை 3. சரி 4. சரி. 5. சரி

**07.** 1. மகாவலி 2. லக்சபானா 3. பம்பரகந்த
4. இரணைமடுக் குளம் 5. ஹற்றன்

**08.** 1) 4 2) 1 3) 2 4) 2 5) 2

**09.** 1. Green Colour
2. Merry Christmas 3. River

**10.** 1. வணக்கம் 2. இடியப்பம் 3. அமருங்கள்

**11.** 1. மண்வெட்டி 2. வாள்
3. கோடரி 4. அரிவாள்

**12.** 1. கரப்பான் பூச்சி 2. எறும்பு
3. நுளம்பு 4. ஈ

**13.** 1) 45 2) 12 3) 43 4) 89 5) 25 6) தரம்
2 - 8 3 - 6 4 - 12 5 - 4

**14.** 1) 240 /= 2) 180/= 3) 45/= 4) 39/=
5) 160/= 6) 40/=

**15.** 1 மணி 50 நிமிடம்

**16.** 37.50 **17.** 8 சென்ரிமீற்றர்

**18.** 1. துவிச்சக்கர வண்டி 2. பேருந்து

**19.** 1. 3 லீற்றர் 2. 200 மில்லி லீற்றர்

**20.** 5 மீற்றர்

**21.** 8 **22.** 2 மீற்றர் அல்லது 200 சென்ரிமீற்றர்

## புள்ளியிடல்

| | |
|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | |
| வினா 01 - | = 12 புள்ளி |
| வினா 02 - | = 03 புள்ளி |
| வினா 03 - | = 03 புள்ளி |
| வினா 04 - | = 02 புள்ளி |
| வினா 05 - | = 05 புள்ளி |
| வினா 06 - | = 05 புள்ளி |
| வினா 07 - | = 05 புள்ளி |
| வினா 08 - | = 05 புள்ளி |
| வினா 09 - | = 03 புள்ளி |
| வினா 10 - | = 03 புள்ளி |
| வினா 11 - | = 04 புள்ளி |
| வினா 12 - | = 04 புள்ளி |
| வினா 13 - | = 09 புள்ளி |
| வினா 14 - | = 09 புள்ளி |
| வினா 15 - | = 02 புள்ளி |
| வினா 16 - | = 02 புள்ளி |
| வினா 17 - | = 02 புள்ளி |
| வினா 18 - | = 02 புள்ளி |
| வினா 19 - | = 02 புள்ளி |
| வினா 20 - | = 02 புள்ளி |
| வினா 21 - | = 02 புள்ளி |
| வினா 22 - | = 02 புள்ளி |
| வினா 23 - | = 12 புள்ளி |
| மொத்தப்புள்ளி | = 100 புள்ளி |

## பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01. பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
    1. கொத்தமல்லி
    2. அலரி
    3. நொச்சி
    4. பூவரசு

02. மீன்பிடித் துறையில் ஒரே முறையில் அதிக மீன்களைப் பிடிக்கக் கடினமான முறை,
    1. டைனமற் மூலம் பிடித்தல்
    2. வலை வீசுதல்
    3. பொறிக் கூட்டில் பிடித்தல்
    4. தூண்டில் போடுதல்

03. இலங்கையின் மிக நீண்ட நதி எது?
    1. களனி
    2. மகாவலி
    3. வளவை
    4. மல்வது ஓயா

04. இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்
    1. நத்தார்
    2. எசலபெரஹரா
    3. ரம்ழான்
    4. சித்திரை வருடப்பிறப்பு

05. மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக்கூடாது.
    1. நாம் அவரை கையால் பிடித்து இழுத்தல்
    2. காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்தல்
    3. பிரதான ஆளியை நிறுத்தல்
    4. இறப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

06. புராதன வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்,
    1. சுற்றுலாக் கைத்தொழில்
    2. தொல்பொருளியல்
    3. கல்வித் திணைக்களம்
    4. சுகாதாரத் திணைக்களம்

07. பின்வரும் உணவு வகைகளில் போசனை கூடியது.
    1. பால்
    2. சர்க்கரை
    3. மீன்
    4. கோதுமை மா

08. சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்ற ஒன்று
    1. விலை
    2. நிறை
    3. முடிவுத்திகதி
    4. விளம்பர அலங்காரம்





09. சூரியனுக்கு மிக அண்மையில் இருப்பதால் மிக வெப்பமாய் இருக்கும் கோள்
    1. வெள்ளி
    2. புவி
    3. செவ்வாய்
    4. புதன்

10. தீ விபத்துக்கு உட்பட்டவர் செய்யக் கூடாதது.
    1. மண்ணில் புரளுவது
    2. ஓடுவது
    3. சாக்கால் மூடுவது
    4. நீரில் நனைந்த சேலையால் மூடுவது

11. வாகனங்கள் வீதியில் செல்லுமிடத்து அவற்றையும் பாதசாரிகளையும் குறிப்பிட்ட விதிப்படி நடத்துவது.
    1. சாரணர்
    2. தடுப்பு
    3. சிவப்பு முன் விளக்கு
    4. சமிக்ஞை விளக்கு

12. சித்திரங்களுக்குப் பெயர் பெற்ற புராதன நகரம்
    1. அனுராதபுரம்
    2. பொலநறுவை
    3. கோட்டை
    4. சிகிரியா

13. விரைவாகச் செய்திகளைத் திரட்டுவதில் அதிக பயனுடையது.
    1. செய்மதி
    2. ரொக்கட்டுக்கள்
    3. சிற்றலை
    4. மீடிறன் அலை

14. கைத்தொழிலுக்கு ஆரம்ப காலத்தில் எரிபொருளாகப் பயன்பட்டது.
    1. நீராவி
    2. நிலக்கரி
    3. நீர்மின்
    4. பெற்றோல்

15. நூல்களைப் பெற்றுப் படிக்கலாம். ஆனால் விற்பனை நிலையமல்ல, உறுப்பினராவதற்கும், நூல்களை எடுத்துச் செல்லவும் முற்பணம் தேவை. நூல்கள் அந்தந்தத் தேவையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.
    1. சனசமூக நிலையம்
    2. நூலகம்
    3. அச்சகம்
    4. புத்தகக் கடை

## சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. பேருந்து வண்டி ஒன்று மு.ப.6.15 இற்குப் புறப்பட்டு பி.ப. 1.45 இற்குத் தனது பிரயாணத்தை முடித்துக் கொண்டது. பேருந்து வண்டி பிரயாணத்திற்காகச் செலவழித்த மொத்த நேரம் யாது?

.............................................................................................................

17. சம நிறையுள்ள 6 புத்தகப் பொதிகளைத் தபாலில் அனுப்ப ரூபா 654 கட்டணம் அறவிடப்பட்டது எனின் ஒரு பொதிக்கு அறவிடப்பட்ட பணம் எவ்வளவு?

.............................................................................................................



கல்வி முரசு